உ

கோடகநல்லூர்

# ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள்

## திவ்யசரித்திரம்.

இஃது

திருநெல்வேலி ஜில்லா கெங்கை கொண்டான்

கிராமவாசியாகிய

ஸ்ரீ எஞ்ய சுப்பிரமணிய ஸர்மா

என்ற

ஜி. கே. சுப்பய்யரால்

இயற்றப்பட்டு

சென்னை

எஸ். எஸ். அச்சுக்கூடத்தில்

எ எஸ். ஜெகதீசன் அவர்களால்

அச்சிடப்பட்டது.

முதற்பதிப்பு

**1940.**

தபாற்கூலி ப்ரத்யேகம்.] [இதன் விலை அணா 12

2000 புஸ்தகங்கள்



கோடக நல்லூர்

ஸ்ரீ ஸுந்தர ஸ்வாமிகள்.

உ



ஸ்ரீ சுந்தரகுரு சரணம் பஜரே —

குரு சரணம் பஜரே

ஜன்ம காரண அஞ்ஞானம் த்யஜரே —

தமசா மிருத ஜீதானம் மித்ரம்

யமசாசனரகிதம் தானம் மித்ரம் —

ஸ்ரீ சுந்தர

போக்தவாம் ஜீவ சரிதம் ம்ருதப்ரபஞ்சம்

தத்வஞான விலாசம் பிரபஞ்சம் —

ஸ்ரீ சுந்தர

புனரபிமாத்ர சகயிக பிதரம்

தனுர்மசிரேண த்யாச தீதரம்—

ஸ்ரீ சுந்தர

பரமஹம்சதர இதனி சித்யா.

பரமஹம்சதா சதோம் திருத்வ —

ஸ்ரீ சுந்தர

# வையை இராமசுவாமி ஐயரவர்கள்

# இயற்றிய

## குருவணக்கம்

இராகம் - புன்னாக வராளி - திரிபுடதாளம்

### பல்லவி

சுந்தர குருவை நிரந்தரம் பணிந்து நான்
தொந்த மகன்றேனே

### அநுபல்லவி

பந்த மோக்ஷமெனுஞ் சிந்தனை தவிர்ந்தவி
டந்தனி லென்றுயி ருந்திடவருள் செய்த
(சுந்தர)

### சரணங்கள்

அவித்தையினுற் பனமாம் செகப்பிராந்தி
யனைத்துமே சொப்பனமாம்
அவத்தையென்றறிந்து சிவத்தைக்காணவாய்ந்த
அல்லும்பகலுமற்ற நல்லஞானக்கண்ணீந்த
(சுந்தர)

சுழுத்தியி லொளியாமல் இருந்ததைச்
சோதித்துத் தெளியாமல்
இழுக்காகச்சீவேச ரெனவேறாய் நோக்கிய
என்னையும் அருளாலே தன்மய மாக்கிய
(சுந்தர)

எப்போது நாம் ப்ரஹ்மம் ஆவோமென
எண்ணுவதே ப்ரமம்
இப்போதினுஞ்சென்ற அப்போதினும் நண்ணும்
எப்போதினும் ப்ரஹ்மம் யாமென்றறியப்
[பண்ணும்
(சுந்தர)

# முன்னுரை

கருமத்தை நிலை நிறுத்திப் பாதுகாக்கவும் இன்னல்களைப் போக்கவும் சம்சாரமென்னும் அளற்றினின்றும் மக்களைக் கைதூக்கி விடவும் பகவானுடைய நாம மகிமையையும் பக்தியையும் ஆத்ம ஞானத்தையும் யோக தத்துவங்களையும் பரபபவும் அளவுகடந்த சக்திகளையும் அதீந்திரிய ஞானத்தையுமுடைய அத்தியாத்தும சோதி ஸ்வரூபிகள் அடிக்கடி இவ்வுலகிலே பிறக்கிறார்கள். அவர்களெல்லாம் கடவுளினிடத்தினின்று நேராய வரும் ரச்மிகள், பகவதம்சங்கள். ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் என்பார் அவர்களுள் ஒருவர்.

அவர் 1831-ஆம் வருஷத்தில் (தென் இந்தியாவிலுள்ள) திருநெல்வேலி ஜில்லாவிலே கங்கைகொண்டான் என்னும் ஊரில் பிரசித்தி பெற்ற அப்பைய தீக்ஷிதர் வம்சத்தில் பெண்வழி சந்ததியிற் பிறந்தவர். அவருடைய தந்தையாரின் பெயர் யக்ஞேஸ்வர சிவன். அவருடைய தாயார் பெயர் காமாக்ஷி. வேதங்களையும் ஷட்தர்சனங்களையும் ப்ரஸ்தானத்ரயங்களையும் பத்தமடை சென்று வாசித்தார். அதிபால்யத்திலேயே அவர் ஒரு அதிசயப் பிறவியாகவும் பரமசிவனுடைய பரம பக்தராகவும் விளங்கினார். கொஞ்ச காலம் இல்லற வாழ்க்கையில் இருந்து, பின்பு, பூர்வ

வைராக்கியம் உதயமானதும் தமது இருபத்து மூன்றாம் வயதிலேயே வித்வத் சன்னியாசம் கொண்டார். திருநெல்வேலி ஜில்லா அடைச்சாணி என்னும் கிராமத்திலே இருந்த தமது குருவான **ஸ்ரீ** விசுவேசுவர சாஸ்திரிகள் மூலம் கைவல்ய ரகசியங்களைக் கற்றறிந்தார். தீவிரத் தியான நிஷ்டைகளால் நிர்விகல்ப சமாதி அடைந்தார்.

அவர் மதுரை, ஜம்புகேசுவரம், திருவையார், மாயவரம், சீர்காழி, சிதம்பரம், விருத்தாசலம், காளகத்தி, காசி, ராமேசுவரம் முதலிய இடங்களுக்கு யாத்திரையாகச் சென்று, சென்ற இடமெல்லாம் அத்தியாத்தும ஞானத்தைப் பரவச் செய்தார்.

அவர் ஒரு பிரம்ம சுரோத்திரியும் பிரம்ம நிஷ்டரும் ஆவர்; பரம ஹம்ஸ சன்னியாசி, அதி வர்ணாச்சிரமி. மிகவும் தாராள மனதுடையவர்; சூத்திரர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் கூட கைவல்யமென்னும் பிரம்ம ஞான ரகசியங்களைக் கற்றுக் கொடுத்தார். ஸம்ஸ்கிருதத்திலே மஹாவித்வான். அனந்தமான அத்தியாத்தும அனுபவங்களால் நிறைந்த ஞானி; அநேக சித்திகள் பெற்றவர்; பக்தியையும் ஞானத்தையும் எங்கும் பரவச் செய்தவர் தாம் சென்ற இடமெல்லாம் சூதஸம்ஹிதைப் பிரவசனங்கள் செய்து வந்தார். இருபத்

திரண்டு கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் செய்வித்தவர். கதைகள் சம்பாஷணைகள் உபந்நியாசங்கள் முமுக்ஷுக்களை மோக்ஷ நெறியிற் பழக்குதல் முதலிய செய்கைகளால் உலக நன்மைக்காகவும் லோகோத்தாரணத்திற்காகவும் உழைத்தவர்.

ஜீவன் முக்தன் எனப்படும், பரம ஞானிக்குரிய சஞாதிசயங்கள் அனைத்தும் அவரிடம் இருந்தன உலகிலே இருந்தும் உலகத்தாரோடு பற்றிலா திருந்தார். யாதொரு பற்றும் அகந்தையுமின்றி நிர்ப்பயமாகவும் ஆனந்தமாகவும் சலியாத சமநிலையும் சமதிருஷ்டியும் கொண்டவராய்ச் சஞ்சரித்து வந்தார்.

என்ன பேரதிசயம்! பூர்வ ஜன்மங்களில் ஸ்ரீ சுந்தர சுவாமிகள் என்ன புண்ணியச் செயல்கள் செய்திருந்தாரோ? தமது ஸத்ஸங்கல்பத்தால் பல அற்புதச் செயல்களைச் செய்தார். பூமியிலே அவதரித்த தெய்வமே அவர். எத்தகைய சாந்த நிலை! எத்தகைய காரிய சக்தி! ஸ்ரீ சுந்தர சுவாமிகளுக்கு நமஸ்காரங்கள். அவர் சென்ற இடமெல்லாம் மக்களைச் சீர்திருத்தினர். மிகவும் சக்தி வாய்ந்த காந்தம் அவர்; அதயாத்தும வீரர் அவர். புருஷ சிரேஷ்டர் அவர். சிருங்கேரி மடத்து ஸ்ரீ சங்கராசாரியார் கூட அவரைப் புகழ்ந்து, ஒரு திரு ஆசனத்தைக் கொடுத்து அவரை "அவதார புருஷரே" என்றனர்.

அவர் ஆத்தியாத்துமிக சக்தியை உண்டு பண்ணும் யந்திரசாலை போன்றவர். அவரது சன்னிதியே மக்களுக்கு ஊக்கம் அளித்து ஆவேசமுறச் செய்யும். அவரது கரஸ்பரிசம், இறந்த பிள்ளைக்கு மீண்டும் உயிர் அளித்தது; ஒரு பெண்ணுக்கு மஹாஸமாதி அனுபவம் அளித்தது. அடர்ந்த புதர்களிலே நிர்விகல்ப சமாதி அப்பியாசம் பண்ணும் போது, பல சந்தர்ப்பங்களிலே பரமசிவனே அவருக்கு உணவு அளித்திருக்கிறார். கணக்கற்ற முமுக்ஷுக்கள் பிரம்ம ஞானம் பெறுவதற்கு இவர் வழி காட்டி இருக்கிறார்.

அத்தியாத்தும அனுபவங்களையும் விஷயங்களையும் பற்றிய உபதேசங்களும் சந்தேக நிவர்த்திகளும் நிறைந்தனவாய்ச் சிறந்த வேதாந்த நூல்கள் பலவற்றை இவர் தமிழில் இயற்றியுள்ளார். அவற்றுள் மிகவும் முக்கியமானவை; ஸ்வானுபூதி ரஸாயனமும் அனுபவ ரஸமஞ்சரியும் நிஜானந்த விலாஸமும் ஆகும். அவர் பிரம்ம கீதையைத் தமிழிலே மொழி பெயர்த்துள்ளார்.

இவர் 1878-ம் வருஷத்தில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் அருகிலுள்ளபுதுக்கோட்டை ஸமஸ்தானத்திலே அரிமளம் என்னும் ஊரிலே மகா சமாதியடைந்தார்.

தூய்மையும் தியாகமும் அன்பும் பரிசுத்தமும் கொண்ட வாழ்க்கை நடத்தி ஜீவன் முக்தரான ஒரு சிறந்த ஆத்மாவின் சரித்திரச் சுருக்கம் மேற் கூறியது. இந்தியாவிற்கு ஒளி காட்டி வழிப் படுத்தும் ஒப்பற்ற தனிவிளக்காய் விளங்கிய ஸ்ரீ சுந்தர சுவாமிகளுக்கு மங்களம். அவரது அருளுக்கு நாம் எல்லோரும் பாத்திரமாவோம் ஆக! பரமஞானியாகவும் பெருங் கல்விமானாகவும் உயர்ந்த தத்துவதரிசியாகவும் சிறந்த வாக்மியாகவும் கை நழுவவிடாத ஆத்தியாத்மிக குருவாகவும் ஸ்ரீ சுந்தர சுவாமிகள் தம் வாழ் நாட் காலத்திலே எண்ணிறந்த மக்களுக்கு ஊக்கமும் உதவியும் அளித்து, இன்றும் தமது புதிய அமரநிலையினின்றும் தமது ஆத்ம சக்தியால் ஒளியும் இன்பமும் பேறும் சாந்தியும் பொழிந்து கொண்டு விளங்குகிறார்.

அவரது உன்னத வாழ்க்கை, சக்தித்தும்பும் அவரது தோற்றம் - இவற்றின் நினைவுகள் நம் மெல்லோர்க்கும் எப்பொழுதும் குன்றாத ஊக்கம் அளிப்பதாக! அவருடைய உயரிய மனதும் இளகிய இதயமும் சிறந்த உபதேச மொழிகளும் பரம லக்ஷ்யத்தை அடைதற்குச் செல்லும் மௌன மார்க்கத்திலே ஒளி வீசி வழி காட்டும் தீபஸ்தம்பங்களாக இலங்குக!

தமது புதிய சாசுவத நிரதிசய பதவியினின்றும் மிகச் சிறந்த நல்லாசிகளை இடை விடாது நமக்குப் பொழிவாராக !

ஓம் தத் ஸத்

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஆனந்த குடீர்
ரிஷிகேசம்
19-6-40

ஸ்வாமி சிவானந்தர்.

சிவமயம்.

சிவபக்திச் செல்வத்தைத் தமிழ் நாட்டில் நன்றாகப் பரவச் செய்து பெரும் புகழுடன் விளங்கிய புண்ணிய சீலர்கள் பலர். அத்தகைய மகான்களுள் திருநெல்வேலியைச் சார்ந்த கோடக நல்லூர் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் ஒருவர். நான் திருவாவடுதுறை மடத்தில் படித்து வந்த காலத்தில் அங்கே இவர்களைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இவர்களுடைய தோற்றப் பொலிவையும் இன்னுரைகளையும் கண்டும் கேட்டும் மிகவும் இன்புற்றேன்.

சிவசின்னங்களின் பெருமையையும் சிவபூஜைச் சிறப்பையும் சிவபக்தியின் மேன்மையையும் சிவபக்தர்களின் உயர்வையும் தம்முடைய பிரசங்கங்களால் தமிழ் நாட்டார் உள்ளத்தில் நன்றாகப் பதியும்படி வெளிப்படுத்திய மேம்பாடு இவர்களுக்கு உண்டு. பல சிறந்த வித்துவான்களும் சாதுக்களும் இவர்களுடைய நல்லுபதேசத்தைப் பெற்றுத் தமக்கும் பிறருக்கும் சாந்தி ஏற்படும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஸ்வாமிகளுக்கு வடமொழியில் சிறந்த பயிற்சியுண்டு. இவர்கள் தம் உபந்யாசங்களில் இடையிடையே தமிழ்ச் செய்யுட்கள் பலவற்றைச் சொல்லுவார்கள். சங்கீத ரத்நமாக விளங்கிய ஸ்ரீ மகாவைத்தியநாத சிவன் அவர்கள் இப்பெரியாரிடம் ஈடுபட்டு சிவகதாப் பிரசங்க முறைகளையும் மெய்ஞ்ஞான உபதேசங்களையும் கேட்டறிந்து மேன்மையுற்றனர்.

ஏகருத்ராக்ஷதாரணம் செய்து கொள்ளும் வழக்கத்தைத் தமிழ் நாட்டில் நிலைக்கச் செய்தவர் இப்பெரியாரே.

திருவையாறு முதலிய ஸப்தஸ்தலங்களிலும் திருமழபாடியிலும் மிகவும் விமரிசையாக ஒரே நாளில் இவர்கள் கும்பாபிஷேகம் நடத்தப்படி செய்தார்கள். இவர்கள் எங்கே சென்றாலும் பரமசாம்பவர்கள் பலருடைய கூட்டம் இவர்கள் பின்னே வரும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சுவாமிகளுடைய சரித்திரம் இப்போது ஸ்ரீமான் சுப்பையா அவர்களுடைய நன்முயற்சியால் சில கனவான்களுடைய உதவியைக் கொண்டு வெளி வந்திருக்கிறது.

இவர்கள் எல்லோருக்கும் சுவாமி டால் வுள்ள பேரன்பு சரித்திரத்தில் ஆங்காங்குள்ள வாக்கியங்களால் தெளிவாகும். இச்சரித்திரத்தைப் படித்து சுவாமிகளுடைய அரும் பெரும் செயல்களை அன்பர்கள் அறிந்து பயனுறுவார்கள் என்று நம்புகிறேன்.

தியாகராய விலாஸ்
திருவொத்தீஸ்வரன் பேட்டை
சென்னை
4—10—1940.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

சிவமயம்.

புதுக்கோட்டை ஸமஸ்தானத்தைச் சேர்ந்த அரிமளம் கிருமத்தில் சித்தி அடைந்த ஸ்ரீமத் ஸ்ரீ சுந்திர ஸ்வாமிகள் அவர்களின் மகிமை எழுத்தில் அடங்கா.

அவர்களின் ஸந்நிதானத்தில் சற்றிருந்தாலும் பிரும்ம தேஜஸின் ஒளி பக்தர்களின் மனதில் பிரகாசித்து ஞானத்தை வருஷிக்கும்.

மேலும், அபேத ஞானத்துக்கு முதல் படியான ஜீவகாருண்யமுள்ள அன்னதானங்களும், அபயப்ரதானங்களும் பொருந்திய ஓர் சித்த புருஷராவாரென்பதை ஆஸ்திகர்களான பக்த கோடிகளுக்கு அறிவிக்கப்படுகிறது. ஆகையால் ஸகல ஆஸ்திகர்களும் ஷெ ஸ்வாமிகளின் ஞாபகார்த்தமாயுள்ள ப்ரதிபிம்பத்தை தியானம் பண்ணிக் கொண்டு, அவரவர்களின் ஆஸ்ரமதர்மபடி தேவையான பொருளை சம்பாதித்து தாராபுத்திராதிகளைக் காப்பாற்றிய பின் அரைமணி நேரமாவது பிரதி தினம் ஓய்வு எடுத்துக் கொண்டு ஸாக்ஷாத் ஷை ப்ரத்யக்ஷ ஸ்வாமி அவர்களையும் அவர்களின் திவ்ய சரித்திரங்களையும் தியானம், பாராயணம் பண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு மென்மேலும் பூ, பொன், மணியணி, தான்யங்களும் ஆயுள் விருத்தியும் உண்டு பண்ணுவது நிச்சயம். இது எழுதிய அறிவு சொரூபனென நான் சிறு வயதினில் மடாதிபத்யம் பெற்று தீர்த்தயாத்திரையாக திவ்ய க்ஷேத்திரமாகிய திருவையாறு விஜயஞ் செய்த தருணம் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகளை தரிசித்

தேன். தத்ஸமயம் ஸர்வாபரண பூஷிதையும் ஐந்து வயதுக்குட் பட்டதுமான ஓர் கன்னிகையை ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களின் மடிமேல் உட்கார்ந்திருந்ததை ப்ரத்யக்ஷமாய்க் கண்டேன். அப்பொழுது ஸ்ரீ ஸ்வாமி கள் அவர்கள் திருவையார் வேத பாடகசாலை ரக்ஷகர் பிரும்மஸ்ரீ மூத்து கனபாடிகள் அவர்களும் அவர்களின் வேத ப்ராமண மாணுக்கர்களும் நிறைந்த சபையில் ஸ்வாமி மலே பக்கமிருந்து வேதாத்யானம் படிக்க வந்த ஒரு பிராம்மண பையனுக்கு சுமார் **16** வயது இருக்கும். எல்லா பிள்ளைகளுடன் மேற்கண்ட பையனும் ஸ்ரீ ஸ்வாமிகள் ஸன்னிதியிலிருந்து வேதம் சொல்லுகையில் ஷை பையனுக்கு திடீரென ஒரு மயக்கம் கண்டு மல்லாந்து விழுந்து கைகால்கள் உதைத்து கண்விழி பிதுங்கி வாயிலிருந்து நுரை நுரையாகத் தள்ளிக் கிடந்தன. அது தருணம் ஸ்ரீ ஸ்வாமி களின் பாதங்களில் ஸகல குழைந்தைகளும் கனபாடிகளும் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து ஷை ஸ்வாமிமலை குழந்தையை கடாக்ஷிக்க வேண்டுமென ப்ரார்த்திக்க ஸ்ரீ ஸ்வாமிகள் தன் வாயிலிருந்த வெற்றிலை தம்பலே சாற்றை அக்குழந்தையின் கண்களில் உமிழ கண்விழித்து மூர்ச்சை தெளிந்து எழுந்தான் அதற்குப் பின் ஸ்ரீ ஸ்வாமிகளின் மடியிலிருந்த கன்னிகையை காணவில்லே. இது விஷயம் இந்த அறிவு ஸௌரூபனுக்கு ப்ரத்யக்ஷமாயுள்ள அனுபோக மென்றே தெறிவிக்கப்படுகின்றது. ஆனதால் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசர், சம்மந்தர் முதலான

நால்வர்களுடன் சுந்தரஸ்வாமிகளும் ஒரு பெரிய சித்தபுருஷராகும் என்பதையும் ஸகலபிராணிகளிடத்திலும் இந்திராதி தேவதைகளிடத்திலும் சிவ விஷ்ணுவாதி தெய்வங்களிடத்தில் மிகுந்த பிரியபக்தியுள்ள ஒரு மகாத்மாவாகுமென்பதையும் யாவர்களும் அறியவேண்டியது அவசியமென்று பிரார்த்திக்கப்படுகிறது.

சுபமஸ்து.

இங்கனம்

சைதாபேட்டையைச் சேர்ந்த மேலமாம்பலம்
கிராமத்தில் இந்திரதீர்த்தாஸ்ரமத்தில் வசிக்கும்
உடுப்பி விஜயிந்திர தீர்த்த
ஸ்வாமிஜி

ஆனந்தவல்லி அம்பாள் துணை
16 –11—40

# முகவுரை

இம்முகவுரையில் சரித்திரத்தின் சுருக்கத்தைப் பற்றி நான் எழுதவேண்டிய அவசியம் ஒன்று மில்லை. ஏனெனில் ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தர் அவர்கள் முன்னுரையில் ஸ்ரீ சுந்தர சுவாமிகளைப் பற்றி விஸ்தாரமாகவே எழுதியிருக்கிறார்கள். தவிரவும் மஹாமஹோபாத்யாயர் டாக்டர் வே. ஸ்வாமிநாதய்யர் அவர்களும் உடுப்பி விஜயேந்திர தீர்த்த ஸ்வாமிஜி அவர்களும் எழுதிய பின் நான் எழுத வேண்டுவது ஒன்றுமில்லை.

நான் திருநெல்வேலி ஜில்லா கங்கைகொண்டான் கிராமத்தில் ஸ்ரீ வத்ஸ கோத்திரத்தில் 6-வது பரம்பரையில் ஜனித்தவன். என் தந்தை ஸ்ரீ குப்புசாமி தீக்ஷிதர் என்று பெயர் வழங்கிய ஸ்ரீ ராமசுப்பா தீக்ஷிதர் அவர்களின் தந்தை ஸ்ரீ சங்கர நாராயண தீக்ஷிதர் அவர்களும் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளின் தந்தை யஞ்ஞேஸ்வர சிவன் அவர்களும் சகோதரர்கள் (ஒரே தாய் வயிற்றில் ஜனித்தவர்கள்) இத்தகையான நெருங்கின பந்துத்வமிருந்தும் எனது 54-வது வயது வரை அன்னாரின் பெருமையையும் மகிமையையும் அறியாமலிருந்தது என் துர்பாக்கியமே.

நான் சென்ற 1939-ம் வருஷம் ஐப்பசி மாதத்தில் சில பெரியோர்களால் ஸ்வாமிகளின் விருத்தாந்தங்களைக் கேட்டது முதல் அன்னாரின் சரித்திர முழுமையையும் ஆராய்ச்சி செய்ய ஊக்கமுடன் முயன்றேன். முயன்றதில் 1914-ம் வருஷத்தில் சுவாமிகளின் அடியார் திருக்கூட்டத்தில் இயற்றப்பெற்று அவர்களுள் ஒருவரான ஸ்ரீ சுந்தரதாஸர் அவர்களால் தஞ்சையில் வித்யாவிநோதினீ அச்சுக் கூடத்தில் அச்சிட்டு வெளிவந்த புஸ்தகத்திலிருந்தும், 1925-ம் வருஷத்தில் பிரும்ம ஸ்ரீ B. V. காமேஸ்வர அய்யர் அவர்களால் இயற்றப் பெற்று புதுக்கோட்டையில் ஜனமித்திரன் அச்சுக் கூடத்தில் அச்சிட்டு வெளிவந்த புஸ்தகத்திலிருந்தும், 1938-1939ம் வருஷங்களில் பரலி ஸ்ரீ நெல்லய்யப்ப பிள்ளை அவர்களால் வெளியிடப் பட்டுள்ள, "லோகோபகாரி" என்ற தமிழ் வாரப்பதிப்பில் ஸ்ரீ. T. K. ராமபத்ரசர்மா அவர்களால் எழுதப் பட்டுள்ளதிலிருந்தும், மற்றும் சென்னை ஏகாம்பரேஸ்வர அக்ரஹாரத்திலுள்ள கூர்ஜரப் பிராமணர்கள் மூலமாயும் மற்றும் சில பெரியோர்கள் மூலமாயும் கிடைத்த விஷயங்களையும் ஒன்று சேர்த்து, திருநெல்வேலி ஜில்லா, கரிசல்குளம் கிராமவாசியும் சென்னை சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ் உபாத்யாயருமான ஸ்ரீ K. ஸ்ரீனிவா

சய்யர் அவர்களின் உதவியால் எழுதப்பட்டு இப் புத்தகம் வெளியிட முயன்றேன்.

தவிரவும் இச்சரித்திரத்தை ஆங்கிலேய பாஷை யிலும் வெளியிட ஸ்ரீ. V. நாராயண அய்யர் M. A. M. L. வக்கீல் அவர்கள் மைலாப்பூர், தமிழிலிருந்து இங்கிலீஷில் மொழி பெயற்றிருக் கிறார். அதுவும் கூடிய சீக்கிரத்தில் வெளிவரும். மேலே கூறியுள்ள பெரியோர்கள் யாவருக்கும் அச்சிட உதவிபுரிந்த கனவான்களுக்கும் என் அன்பார்ந்த நன்றியை செலுத்துகின்றேன்.

மிகவும் சிறப்பும் மேன்மையும் தெய்வத் தன்மையும் வாய்ந்த மஹான் ஸ்ரீ சுந்தரஸ்வாமி களின் இச்சரித்திரத்தை எல்லோரும் சிரத்தை யுடன் படித்து ஈச்வர பக்தியிலீடுபட்டு இகபர மிரண்டிலும் மேன்மையடைந்து ஸ்வாமிகளின் கிருபைக்குப் பாத்திரர்களாகும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 15, குப்பையச் செட்டி தெரு,<br>பழைய மாம்பலம்<br>தியாகராய நகர்.<br>25—12—1940 | இங்ஙனம்<br><br>ஜி. கே. சுப்பய்யர். |

# அட்டவணை

பொருள் அடக்கம் பக்கம்.

முதல் அத்தியாயம். 1

பெரியானெனப் பெயர் பெறுவர் யாவர், பாரதநாடு, சுந்தரரின் அவதாரம், குரு உபதேசம்.

இரண்டாவது அத்தியாயம். 15

ஸ்ரீ சுந்தரர் சிவனுதல், மாமனாரின் பூஜை அனுக்கிரஹம், இல்லறமும் நல்லறமும், ஞானகிரியரை நாடி உபதேசம் பெறல்.

மூன்றாவது அத்தியாயம். 23

தீர்த்த யாத்திரை, குரு பரம்பரை, உத்தர தேச யாத்திரை, மாண்டவர் மீண்டனர், சிஷ்யரின் துறவு.

நான்காவது அத்தியாயம். 31

ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள், நாணற் புதரில் நிஷ்டை, மகாதேவன் அன்னம் இடுதல், வெந்தயூல் வரவழைத்தமை, நெல்லையில் லட்ச தீபம், சித்தம் தெளிய சாதனம சிவ பஜனை.

ஐந்தாவது அத்தியாயம். 42

ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளே மஹாஸந்நி
தானம், மலைபமலை தவம், சர்வம்
சிவமயம், மஹாஸந்நிதானத்தின்
புதுக் கோட்டை விஜயம், ஸ்திரி
கள் ஞானம் பெறுதற்கு உரியர்,
இரண்டாம்நாள் படணம், சிற்
சபேசரின் சிரிய உருவப்படம்,
தன் செயலுக்கு ஓர் பிரமாணம்,
திவ்விய ரதம், திருமலை ஜோதி,
அநுபவரஸமஞ்சரி அருளுதல்,
பரமசிவனே அளித்த பஞ்சான
னம், சேதுயாத்திரை, அரிமள
விஜயம், சிவச்சின்னம், பஞ்சாட்
சரம், இரண்டாம் லட்சதீபம்.

ஆறுவது அத்தியாயம். 70

சுவாமிகள் மதுரை விஜயமும் மாட்சியும்
அன்னமிட ஆற்றப் பாது தூது,
சென்னை விஜயம், சப்தஸ்தான
கும்பாபிஷேகம்.

ஏழாவது அத்தியாயம். 81

கெங்கை கொண்டான் கும்பாபிஷேகம்,
பஜனை ராணுவம், பிரும்ம கீதைக்குத்

தமிழ் மொழிபெயர்த்தல், சுந்தரம் பிள்ளை சந்திப்பு, தீர்க தரிசனம், நிஜானந்த விலாசம், இயற்றல், அரிமளம் வந்து அருளுடன் கலத்தல்.

எட்டாவது அத்தியாய 89

சுவானுபவப் பிரமாணம், சில திரு விளையாடல்கள்.

ஒன்பதாவது அத்தியாயம். 98

ஸ்ரீ சுந்தர மஹாஸந்நிதானத்தின் ஜீவிய மகிமை, ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளை பலரும் அறியாததேன்!

நூற்சிரப்பு 102

ஸ்ரீ சுந்தர சுவாமிகள் ஜாதகம். 104

வையை இராமசுவாமி ஐயரவர்கள் இயற்றிய தோத்திரங்கள் 105

திருநெல்வேலி மாவடி ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்கள் இயற்றிய வெண்பா 115

பிழைத் திருத்தம் 118

உ

ஸ்ரீ கணேசாய நம:

நெரூர்

# ஸ்ரீ ஸதாசிவப்ரஹ்மேந்திரஸ்வாமிகள் திவ்விய சரித்திரம்.

---

## முதல் அத்தியாயம்.

### பெரியாரெனப் பெயர் பெறுவர் யாவர்?

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி,
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகியானென தென்றவர வரைக்கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே

இவ்வுலகில் அனேகர் பற்பல விதங்களிற் பெரியவரெனப் பெயர் பெறுவர். சௌரியத்தாலும் வலிமையாலும் பெயர் படைப்போர் சிலர். கல்வித் திறமையாலும் சொல்வன்மையாலும் புகழ் பெறுபவர் அனேகர். பெருஞ்செல்வம் படைத்து அதை நீதி நெறியிற் செலவிட்டுத் தருமங்களியற்றி வள்ளலெனப் பெயர் கொள்வோர் பலர். பிறர்க்கென்றே தமது உடலுயிர்பொருள்களை தத்தம் செய்து தமது நாட்டுக்கும் தேசத்தவர்க்கும் ஏற்றமுண்டாகும்படி உழைத்

துப் பெயரடைபவர் பலர். ஆனல் பெயர் வேண்டும், புகழ் வேண்டும், பிறர் மெச்ச வேண்டுமென்ற கருத்துடன் உழைப்பவர் பெரியோரெனப் பெயர் படைத்தாலும் அது ஆன்மலாபத்திற்குப் பயன்படாது. நமக்குக் கிடைத்திருக்கும் சக்தி ஈசனு லருளப்பட்டது. விபூதி, நன்மை, திரு, வலிமை இவை எவரிடத்திற் காணப்பட் டாலும் அஃதெல்லாம் எனது தேஜஸ் ஸின் ஒரு சிறு பகுதியிலிருந்து வந்த தென்றறி யென்று கண்ணபிரான் அர் ஜுனனுக்கு உபதேசித்தபடி பெருமை யென்பது பெருமானிடத்தினின்றன்று வேறுயெவ்விதம் சம்பவிக்கும்? ஆகை யால் அவன் கொடுத்த திருவை யவ னுக்கே யர்ப்பணம் செய்வது நமது கடமையென்று உறுதியாய் நம்பித் தமது கடமையைச் செய்பவர்தாம் பெரியவ ரெனத்தகுவர்.

இத்தகைய பெரியோரும் ஆத்மஞான மடையாதவரை கீழ்ப்படியிலுள்ளவர்களா கவே மதிக்கப்படுவர். தன்னையறிந்த வனே தேவனுைப்பவன். சுவானுபூதியிற் றன்னை உட்கண்ணுலறிந்து கொண்டவன்

தேவனெப்பானென்று சொல்வது இழி வாகும். அவனே தேவன். மற்றவர் எவ் விதமான பெருமை வாய்ந்தவராயினும் நாடோறும் உண்டதேயுண்டு வீணாக வாணாட்கழிப்பவராவர். நல்லவர்களின் திருவெல்லாம் பரோபகாரத்தின் பொருட்டேயென்ற காளிதாசன் திருவாக் கின்படி தமது பொருட்செல்வம் திறச் செல்வம் அதிகாரச் செல்வம் யாவையும் பிறர்படும் துன்பத்தை விலக்குவதற்கே உபயோகித்தபோதிலும் ஜீவகோடிகளனைத்தையும் துயரினின்று நீக்கவல்லார் எவராவது உளரோ? ஈசன் திருவருட்படி தத்தமக்கேற்பட்ட சுகதுக்கங்களை யவ ரவர் அனுபவித்தே தீரவேண்டும். அவ் வித அனுபவத்தால் மனம் பாகமடைந்து இஜ்ஜன்மத்திலோ மறு ஜன்மத்திலோ அதற்கேற்ற ஸம்ஸ்காரத்தையடையும். ஆகையால் அஹிம்ஸையும் பரோப காரமும் பிறர்க்கு அபகரிப்பதைவிட மனத்தைச் சுத்தி செய்து பக்குவப் படுத்துவதற்குப் பிரயோசனமாகும்.

மனம் சுத்தப்படுதலே அரிது. எவ் விதச் சுத்தமடைந்தாலும் மனம் மனமே;

குரங்கு போன்றது; அதைக்கட்டி வைத்திருக்கும் போதும் கயிறெட்டுமட்டும் குதித்துலாவும்; தனக்கியல்பான சேட்டைகளை விடாது: அது எங்கிருக்கிறதோ அங்கேயே நமது சரீரமும் கருமங்களும் செல்லும். ஆகையால் மனத்தைத் தொலைப்பதே விசேடம். ஆனால் மனத்தைத் தொலைப்பதென்றால் சுலபமாகக் கூடிய காரியமா? கல்வியும் விவேக நுட்பமும் அறநெறியொழுக்கமும் ஒருங்கு வாய்ந்த தாயுமான சுவாமிகளே 'பாழான வென் மனம் குவியவொரு தந்திரம்' வேண்டுமென்று கதறவில்லையா? மெய்மறந்து புலன்களின் செயலற்று மனது இறந்து நானென்றும் வேறென்றும் துவைதபாவமற்றுத் தனிப் பரஞ்சோதியாயெஞ்சி நின்றவரெவரோ அவரே ஈசனுக்கு நிகராவர். அநேக ஜன்ம ஸம்ஸ்காரம் பெற்று திகம்பரனுய் முயற்சித்து, பகவான் கீதையில் 'வெகு பிறப்புகளின் முடிவில் ஆத்மஞான மடைந்தவனே என்னையடைகிறு' னென்றருளியபடி ஆத்மஞானியர் ஜோதியாய்த் தனித்து நிற்பார். அவர் செய்வதெல்லாம் பிறர்க்கு நன்மை பயப்பதேயாகும்

அவர் கடைக்கண்ணால் பார்த்தாலுமே அக்கடாட்ச வீட்சணம் பெற்றவன் மருள் நீங்கி தானுய்யும் வழியுணர்ந்து அதைக் கைக்கொள்வான். அவர் ஹஸ்தமஸ்தக ஸம்யோகமென்னும் முறையால் நமது கையை நம்போலியர் தலையில் வைத்துத் தடவிக்கொடுத்த மாத்திரமே அவரிடத்திலிருந்து வெளிப்படும் சக்தியால் நம் மனத்தழுக்குயாவும் நீங்கிப் புனிதராகலாம். இவ்விதம் மகிமை பெற்ற மகான்கள் நமது நாட்டிலிருந்திருக்கிறார்கள். அவர்களிலொருவர் சுந்தர சுவாமிகளென்று வழங்கப்பெற்றவர். அவரது சரித்திரத்தை சிறிது விசாரிப்போம்.

## பாரத நாடு

இந்நிலவுலகின்கண் மிகவும் சீரும் சிறப்பும் வாய்ந்திருந்தது நம் பாரதநாடு. இந்நாட்டில் தான் ஆறறிவு படைத்த மாந்தர் யாவரும் தமது விவேகத்தினாலும் சிரத்தையாலும் தாம் விரும்பிய பயன்களையெல்லாம் எளிதில் பெற்று உய்யுமாறு வாழ்க்கை முறை வகுக்கப்பெற்றுள்ளது. பிற தேசங்களில் பல பிறவி

பெற்றுப் பல காலம் அரிய பெரிய செயல் புரிந்து அடைதற்கரிய நலன்களையெல்லாம் சிரத்தையென்னும் ஒரே கருவி கொண்டு இவ்வொரு பிறவியிலேயே எளிதில் பெறுதற்குரிய நற்றவ முறைகளை வகுத்ததும் நமது தாய் நாடே.

தர்மநெறியைக் கடைப்பிடித்துப் பொருள் ஈட்டலும், அதனுல் ஒரு சிறிது இன்பம் பெறுதலும், பரம் பொருளின் பேரானந்தம் கருதி, அவ்வறம், பொருள், இன்பம் என்ற மூன்றினையும் விடுத்து, அப்பால் தான் பெற்ற பெரும் பேற்றை - பேரானந்தப் பெரு வாழ்வை - உலகோர் யாவரும் பெறும் வண்ணம் நல்வழி காட்டியருளிய மஹான்களின் திருவடிகளால் புனிதம் பெற்ற நன்னாடும் இந்நாடே. ஸத்கருமம் என்ற அரும்பும், பக்தி என்ற நன் மலரும், யோகம் என்ற செங்காயும், ஞானம் என்ற தீங்கனியும் நிறைந்து பல் கிளை (சாகை) களோடு விளங்கும் வேத தர்ம விருக்ஷத்தின்மீது அதர்மம் என்ற புல்லுருவியானது எப்பொழுது எந்நேரத்தில் தோன்றுகிறதோ; அப்பொழுது யான், எனது என்னும் மாயையை வச

மாகக்கொண்டு இவ்வுலகில் தோன்றி எனது அவதாரம் என்னும் கருவிகொண்டு அப்புல்லுருவியை அறவே ஒழித்து, அத் தர்ம கல்பக விருக்ஷத்தைச் சுதந்தரமாக வளரச்செய்வேன் என்று கீதாசார்யன் பார்த்தனுக்கு அருள் புரிந்த நாடும் இதுவே. அந்த ஸத்ய வசனத்தை மெய்ப் பிக்கவே போலும் பல மஹான்களின் அவதாரங்களை அடுக்கடுக்காகப் பெற்ற பொன்னாடும் நம் நாடே.

## சுந்தரரின் அவதாரம்

> நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
> நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
> குணங்கள் உரைப்பதும் நன்றே அவரோடு
> இணங்கி யிருப்பதும் நன்று.

இத்தகைய பெருமைகளைப் பல நூறு ஆண்டுகளாகப் பெற்று வந்த இப் புண்ணிய தேசத்தில் தென் பாண்டித் திரு நாட்டில் தக்ஷணகங்கை யெனப்பெயர் பெற்றோங்கிய தாமிரபர்ணி நதியின் வள மிக்க தீரத்திலுள்ளதும், புராணங்களால் மிகச் சிறப்பித்துக் கூறப்பெற்றதுமான சாலீவாடிபுரம் என்னும் திருப்பெயர் வாய்ந்த திருநெல்வேலி க்ஷேத்திரத்திற்கு

வடபால் ஒரு யோசனை தூரத்தில் சிறப்பு மிக்க சித்திரகங்கா தீரத்தில் ஆனந்தவல்லி சமேதராய் ஸ்ரீ கைலாசநாதர் திருக் கோயில்கொண்டருளிவீற்றிருக்கும்கங்கை கொண்டான் எனப் பெயர்ப் பெற்ற திவ்விய சிவக்ஷேத்திரம் ஒன்றுளது.

கங்கை கொண்டான் என்பதே இவ் வூரின் பெயர் என்றும் கண் இழந்த ஒருவன் இறைவன் அருளால் கண் கொண்டது பற்றி இப்பெயர் வந்தது என்று ஆன்றோர் கூறுவர். கங்கை எனும் சொல் பிறவிப்பெரும் பிணியை நீக்கத் தக்க பரிசுத்தம் பொருந்திய தீர்த்தம் என்ற பொருளைக் குறிக்கும். எனவே, தனது ஜனன கால விசேஷத்தால் மானிட வர்க்கத்தையே பரிசுத்தம் செய்விக்கும் மஹானின் திரு அவதாரத்தைத் தன்னுள் கொண்ட கங்கை கொண்டான் என்ற ஊரும் தனது பெயரைக் காரணப்பெய ராகப் பெற்றுக்கொண்டது.

மஹான்களின் அவதாரங்களெல்லாம் உலகில் கால இயற்கையால் எல்லா விஷ யங்களிலும்-முக்கியமாக தெய்வீக மகிமை

களிலும் - தனது ஆத்ம சக்தியிலும் நம்பிக்கை முற்றும் ஒழிந்து ஐயம் என்பதே குடிகொண்ட எளிய மனிதர்களின் சூன்ய ஹ்ருதயங்களில் தூய ஆன்ம விலாசமற்ற இருட் குகைகளில் தனது அருட்கிரணங்களைப் பரப்பவே ஏற்படுகின்றன. அவ்வாறு ஈசனருளுக்குப் பாத்திரர்களான மகா புருஷர்களில் முதன்மை பெற்று விளங்கியவர் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள்.

காஞ்சி நகருக்கருகில் அடையப்பலம் எனும் கிராமத்திலிருந்த ஆர்சானி தீட்சதர் என்ற சிறந்த பண்டிதர் விஜய நகரத்து கிருஷ்ண தேவராயருக்குக் குருவாயிருந்தார். அவர் காலஞ்சென்றபின் அவரது ஐந்தாவது புத்திரர் ஸ்ரீ ரங்கராஜர் குருவானார். கிருஷ்ண தேவராயர் கி. பி. 1529 யில் இறந்ததும் ரங்கராஜர் சித்சபேசனருளால் 1554-ல் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய அப்பய்ய தீக்ஷதரைப் பெற்றார். அப்பய்ய தீக்ஷதர் சகல சாஸ்திரங்களிலும் வல்லவராய் வாஜபேயம் முதலிய யாகங்களையும் செய்து முடித்தவர். அவர் வட மொழியில் இயற்றிய கிரந்தங்கள் 104. அவைகளில் ஒன்று தான்,

வேதாந்த சூத்திரத்திற்கு சங்கர பகவத் பாதர் செய்த பாஷ்யத்திற்கு அவரியற்றிய பரிமளம் என்ற விருத்தியுரையாகும். "படித்தால் அப்பய்ய தீக்ஷதரைப் போல்" என்று நம்முள் வழங்கும் ஒரு பழமொழியே அவரது பெருமைக்குச் சிறந்த சான்றாகும்.

தவமிகுந்த ஸ்ரீ அப்பய்ய தீக்ஷதரவர்களின் பெண் வழிச்சந்ததியில் ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் ஐந்தாவது பரம்பரையில் பிறந்தவர் தான் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள். இவரைத் திருக்குமாரனைப் பெறும் பாக்கியம் உத்தம குணங்கள் நிறைந்த யக்ஞேசுவர சிவன் என்பார்க்குக் கிடைத்தது. அவருடைய இரு குமாரர்களில் சுந்தரர் இளையவரே. ஸ்வாமிகளின் திருமேனியைத் தனது வயிற்றில் தாங்கிப் பெற்று எடுத்து வளர்த்த அன்னை காமாக்ஷி என்பாள். யக்ஞேசுவரர் வேத வேதாங்கங்களை நன்கு கற்றும் தம்பால் கற்க வருவோர்க்கு நன்கு உணர்த்துபவராய் குருலிங்கஸத்ஸங்கங்களிலும் ஒப்பற்ற மனமுடையவராய் விளங்கினர். அவர் தர்ம பத்தினி காமாக்ஷியம்மாளின்

காருண்ய குணச் செயலுக்கு வியந்தே போலும் ஸ்ரீ சுந்தரரைத் திருக்குமரனைகப் பெறும் பேற்றைப் பரமேசன் அன்னார்க்கு அருள் செய்தான்.

இத்தம்பதிகளுக்கு முன்னைப் பிறவி பலவற்றில் முயன்று செய்த முழுத் தவத்தின் பலனே ஓருருவெடுத்து வந்தாற்போல, கலிநாலாயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தி மூன்றும் ஆண்டில், கொல்லம் 1007-ம் ஆண்டு கர வருஷம் கார்த்திகை மாதம் இருபதாந்தினத்தில் (3-12-1831) அமாவாசையன்று அனுஷ நக்ஷத்திரத்தில் இடப லக்கினத்தில் பரம கருணாநிதியான ஸ்ரீ பரமேசுவரனே ஓர் மகவாய் அவதரித்தார். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதற்கேற்ப, குழந்தை பிறந்தவுடன் விளங்கிய அழகிய தோற்றமே "சுந்தரம்" என்ற பெயரைத் தனக்கு உரியதாகக் கொண்டது.

இம் மகவு அவதரித்த திவ்வியதினத்தில் சித்திர கங்கையின் திருநீர்த்தம் தனது ஜன்ம பூமியிலுள்ள சிவமதி கங்கையாம் எனத் தெளிந்து விளங்கிற்று. ஆண்டுள்ள

பல்வகைப் பிராணிகளும் இன்பவாரியில் திளைத்தன. யக்ஞேசுவரரும் இம்மகவினைக் கண் குளிர நோக்கி சுகமுற்றாராயினும், உலகியலின்படி சித்திர கங்கா நதியிற் படிந்து ஜாதகர்மாதிக் கிரியைகளை வேதங் கூறியவாறு நடத்தி கோதானம், பூதானம், ஸ்வர்ணதானம், முதலிய அனேக தானங்களும் செய்து, அரிய மானிடப் பிறவி பெற்றதனாலாம் பயன் பெற்றோமெனப் பெருமகிழ்வெய்தியிருந்தார். தெய்வ நியதிகளை எளிதில் உணரும் திறமை பெற்ற சோதிடர் யாவரும் இக்குழந்தையானது பூத உடலத்தால் அழகு பெற்று விளங்குவதேபோல் தனது ஒப்பற்ற தெய்வீக உள்ளத்தாலும் ஞானத்தாலும் உலகோர் போற்றும் அழகு வாய்ந்து விளங்கும் எனக் கூறினர். பின்னர், அன்னப்பிராசனம், சௌளம் முதலிய கிரியைகளையும் நடத்தி அக்குழந்தையை அன்போடும் வளர்த்து வந்தனர்.

இவ்வருங்குழவி இளம் பிராயத்தில் விளையாடிய விளையாட்டுக்களெல்லாம் வேத புராணங்களையும் சைவ ஆகமங்

களையும் ஸ்மிருதிகளையும் நல்லாசிரியர் மூலமாயுணர்ந்த அன்பர்களியற்றிவரும் சிவபூஜையாதி உத்தமச்செயல் போலவே யிருந்தன. சுந்தரர் தமது தோழருடன் விளையாடும்பொழுது மஹாதேவ நாம பஜனம் மேலிட்டு நிற்கும். சிலபொழுது பத்மாஸனம், யோகாஸனம் முதலியன இட்டு அமர்ந்தும் சித்தத்தைச் சிவன்பால் செலுத்தியும், சிவயோகம் செய்வார். இவ் வரிய செய்கைகளைக் கண்டு பெற்றோர் வினையின் பயனால் பதினெண்மதி நிறைந்த இக்குழந்தையை விட்டுப் பரகதி யடைந்தனர்.

சுந்தரரையும், அவரது மூத்த சகோ தரர்குப்பாணிசிவன் எனப்பின் வழங்கிய இராமசுப்பய்யரையும் அவர்களது மாமன் வெங்கடசுப்பய்யர் தமது ஊராகிய பத்த மடைக்கு அழைத்துச்சென்று அங்கே அவர்களை வளர்த்து வந்தார்.

சுந்தரரது ஐந்தாம் ஆண்டில் வட மொழி தென்மொழிகளில் வல்லவரான ஒரு உபாத்தியாயரால், அவருக்கு அக்ஷராப்பியாசமும் செய்விக்கப்பட்டது. தாம் கற்கத் தொடங்கிய நூல்களையெல்

லாம் சுந்தரர் தான் முன்னமேயே கற்றதுபோல் ஆசிரியர் வியப்ப எளிதில் விரைந்து கற்று வல்லவராயினர். ஏழாம் பிராயத்தில் மாதுலரால் உபநயனம் செய்யப்பட்டு அவ்வூர் கிருஷ்ண கனபாடிகள் என்னும் ஓர் நல்லாரிடம் சுந்தரர் வேதாத்யயனம் செய்து வந்தனர். நாளடைவில் சிவப்பிரசாதத்தால் வேதபாஷ்யங்களையும், புராணம், ஸ்மிருதி (தர்ம சாஸ்திரம்), தர்க்கம் (ஊஹம்), வியாகரணம் (இலக்கணம்), மீமாம்ஸை (ஆராய்ச்சி), இதிகாசம் (புராதன சரிதம்), முதலான கலைகளையும் சுந்தரர் தானே கற்றுணர்ந்து அந்தந்த சாஸ்திரங்களில் வல்லோர் வந்து வாதஞ்செய்து தோல்வியுற்று வணங்கிப் புகழும்படி அவரது புகழ் திசையெலாம் பரவியது.

## குரு உபதேசம்

தமது புத்தி நுட்பத்தால் எல்லாமுணர்ந்த சுந்தரர்க்கும் உலகமுறையாக ஒரு பெரியார்பால் சென்று வேதாந்த சாஸ்திரப்பயிற்சி பெறவேண்டுமென ஓர் அவா எழுந்தது. எழவே, வீரவநல்லூர் எனும் நல்லூரிலே வசித்த பண்டித

சிரோமணியாய் மேலோரிடத்து பக்தி, மூதியோர் பால் அன்பு, கீழோரிடத்துக் கருணை, உலகபொருள்களிடத்து ஒழிவு, அவாவின்மை முதலிய ஜீவன்முக்த லக்ஷணங்களோடு பொலிபவராய்க் காணப்பட்ட ஸ்ரீ சுந்தர சாஸ்திரிகள் பால் சேர்ந்தார். நமது சுந்தரரும் சுந்தர குணங்கள் நிரம்பிய ஸ்ரீ சுந்தர சாஸ்திரிகளது அன்பிற்குரிய மாணாக்கரானார். சர்வ வேதாந்த நிச்சயப் பொருள்களையும் தன்னுள் கொண்டு விளங்கும் பிரம்ம ஸூத்ர பாஷ்யம், உபநிஷத்தின் பேருரை, கீதையின் விரிந்த கருத்து என்னும் பிரஸ்தானத்திரயங்களையும் சம்பிரதாயப்படி சிரவணம் செய்து சாந்தி பாடம் இயற்றி பக்தியுடன் பரமாசாரியாரிடத்து அனுமதி பெற்றுப் பத்தமடை வந்து அனுதினமும் அன்பை வளர்க்க சூதஸம்ஹிதையைப் பாராயணம் புரிந்து வந்தார்.

## இரண்டாவது அத்தியாயம்

## ஸ்ரீ சுந்தரர் சிவனுதல்

ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம் என்பதற்கேற்றபடி, சுந்தரர் நித்தியகர்மா

னுஷ்டான நெறியில் முனைந்து விளங்கினார். அதிகாலையில் விடிய ஐந்து நாழிகைக்கு முன்னரே எழுவார்; ஸ்நானம் முதலியன புரிந்து நித்திய கர்மங்களை நியமம் தவறாது நிறைவேற்றுவார். நெற்றியில் அணிந்த விபூதியின் ஒளியும் திருக்கழுத்தில் துலங்கும் சிவ ருத்திராக்ஷ மாலையும் கண்டோர் மனதில் சுந்தர உருவக்காட்சியளித்துப் பதிந்து நிற்கும். அனுஷ்டானம் முடிந்ததும் சிவ தரிசனம் செய்வார். சரீர நலத்தை வளர்க்கும் சாத்வீக உணவை உட்கொள்வர். "எஞ்சிய பொழுதை ஏன் வீணுக்குகின்றீர்'' என உலகோர்க்குப் புகட்டுவார் போலும் எஞ்சிய பகற்பொழுதைச் சூத ஸம்ஹிதைப் படனத்திலும் இரவைச் சிவ பஜனத்திலும் கழித்து வந்தார். இவ்வாறு அரிய நல்லொழுக்கங்களை அனுஷ்டித்து வரும் அவரைக் கண்டு அவ்வூரார் யாவரும் மகிழ்ந்து, "இவர் சிவனே என்பதில் ஐயமில்லை'' என நினைத்து, சுந்தரசிவன் என்னும் பெயரிட்டு அவரை அவ்விளம பிராயத்திலேயே அழைப்பாராயினர்.

தன் பெயராலும், உருவத்தாலும், குலத்தாலும், குணத்தாலும், கல்வியறிவொழுக்கங்களாலும், சுந்தரராகவே விளங்கிய சுந்தரரின் பெருமையினைக் கண்டு வியந்து மகிழ்ந்து அவர் மாதுலர் தமது மருமகர் மனத்திற்குரிய ஒருத்தியைத் தெரிந்து மணம் செய்விக்க விரும்பினர். அக்காலத்தில் அடைச்சாணியென்னும் கிராமத்தில் வைதீக சாம்பராய் விளங்கிய இராமசுப்பய்யரின் திருப்புதல்வி ஜானகியம்மாளை சுந்தர சிவனார்க்கு வேத முறைப்படி மணம் புரிவித்தனர்.

## மாமனாரின் பூஜை அனுக்கிரஹம்.

உயர் பொருளை உள்ளத்தே நாடி நின்ற சுந்தர சிவனாரும் உலகப் பார்வையில் ஒரு முறையாக இல்லறம் நடத்திவரலானார். விபூதி, ருத்திராக்ஷம் அணிந்த திருமேனியோடு காணப்படும் சிவபக்தர்கள், வேதியர்கள், யோகிகள், ஞானிகள் முதலான சாதுக்களைச் சுந்தர சிவனார் காணுந்தோறும் தமது மனைக்கு அழைத்துச் சென்று அன்போடு விருந்தளித்து சாஸ்திர சம்பாஷணைகளால்

அளவளாவி ஆனந்த முறுவார். இப்படிச் சிறிது காலங்கழிய, அவர் மாமனர் தம்பதிகளைத் தமது ஊருக்கழைத்துச் சென்று, அங்கே தன்னுடன் சிலகாலம் இருத்தி, அவரது தீவிர பக்தியையும், ஒழுக்கத்தையும் கண்டு மகிழ்ந்து, அவருக்குப் பாணலிங்கத்தையும், நடராஜர், சிவகாமியம்மை முதலாய மூர்த்திகளையும் தந்து, பூஜை முறைகளை உபதேசித்து, அவரைப் பத்தமடைக்குத் திரும்ப அனுப்பிவித்தார்.

## இல்லறமும் நல்லறமும்.

பத்தமடை சேர்ந்ததும் சிவ பூஜையில் சுந்தரசிவனர் மிக ஈடுபட்டார். தினமும் தவறாது தனது திருக்கரத்தாலேயே ஆயிரம் கூவிள இதழ்களும் பிறமலர்களும் கொணர்ந்து, திரிகாலமும் மனைவியார் சமர்ப்பிக்கும் மஹா நைவேத்யங்களை நிவேதித்து ஷோடசோபசாரமும் செய்து பூஜித்தும், சிவநாமஜபம் ஒரு லக்ஷம் ஜபித்தும், ஆத்ம லிங்கத்திற்கு அளித்து மீந்த அன்ன சேஷத்தை அருந்தியும் வந்தார். இரவில் ஆலய தரிசனம், பஜனை

முதலியவைகளைச் செய்தும், பழம், பால், முதலியவற்றையே பருகியும், சிவத்தி யானதிகளால் பொழுது போக்கியும், பின் சிறிது நேரம் கண் அயர்வார். இதுவே இவரது இல்லற வாழ்க்கையில் ஓர் நல்லற மாயிற்று. சுந்தர சிவனாரின் உள்ளத் திலும், தர்மத்திலும், ஒரு பாதியை உரிமையாகக் கொண்ட இவரது தர்ம பத்தினி ஜானகியம்மாள் சுந்தர சிவனார் சிந்தையில் தோன்றியதைக் குறிப் பறிந்து, அவரது மனமொப்ப நடந்து வந்து, அவரது அருந்தவத் துணைவியாக விளங்கினள்.

## ஞானசிரியரை நாடி உபதேசம் பெறல்.

இவ்வண்ணம் வாழ்நாளில், சுந்தர சிவனார் நித்தியமான பொருள் இன்ன தன்மையது என்றும் உலகவாழ்வின் தோற்றங்கள் நிலைத்து நிற்பன அல்ல என்றும் சிவப்பிரஸாதத்தால் உணர்ந் தார். உணரவே சென்ற கால நிகழ்ச்சி களையும், வருங்கால வாழ்க்கைப் பயன்களை யும், நிகழ்கால சுக விருப்பங்களையும் வியந்து எழுகின்ற மனக்கற்பனைகளைத்

தடுத்தார்; ஐம்புலன்களும் அடங்கப் பெற்றன; மனம் பிற பொருளில் ஆசை கொள்ளவில்லை; உள்ளம் அமைதிபெற்று சிவஸ்வரூபமான குரு மூர்த்தியின் அனுக்கிரஹம் பெறுவதில் இடையறாத சிரத்தை கொண்டு இலங்கியது. சரியை கிரியைகளால் சித்த சுத்தி உண்டாகவே, ஞான மார்க்கத்தைத் தக்க ஆசிரியரிடம் உபதேசம் பெறவேண்டுமென்ற ஆசை மேலிட்டது. ஞானாசிரியரைப் பல இடங்களிலும் தேடி அடைச்சாணி என்னும் கிராமத்தில் விசுவேசுவர சாஸ்திரிகள் என்னும் ஞானைசுவரியசம்பன்னர் இருக்கின்றார் எனக் கேள்வியுற்று, அவரது சன்னிதானத்தை அடைந்தார். "அகண்ட பரமசிவமே எளியேனாகிய என்னை ஆண்டருளும் பொருட்டு இத்திருக்கோலங் கொண்டு வீற்றிருக்கின்றது" என உள்ளத்திற் குறித்து, சுந்தரசிவனார் விசுவேவரர் பாதகமலங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து, உள்ளமுருகவும், கண்ணீர் பெருகவும், உரோமம் சிலிர்க்கவும், நாத் தழுதழுப்பவும் நின்று தரிசித்து, "குருநாத" அடியேனை ஞானோப

தேசம் செய்து திருவடிகளுக்கு ஆளாக்கி இரக்ஷித்தருளவேண்டும் என பிரார்த்தித் தனர்.

ஆசிரியரும் இவரது தீவிர பக்குவத்தைக் கண்டு மனமகிழ்ந்து கிருபா நோக்கம் செய்து அருகே அழைத்து, அஞ்சேல் என்று அபயகரம் அருளி, தமது அருட் கையைச் சிவனரது சிரத்தில் வைத்து ஒருமொழி உபதேசத்தை அனுபவவாயிலாய் விளக்கியருளினர். அகத்தே அனுபவ உணர்வு தோன்றலும், சுந்தரசிவனர் உலகவாசனையற்று உண்மை வடிவினை உணர்ந்து அகண்டாகார சொரூபமாய் விளங்கினர்.

பின்னர் நெடு நேரம் சென்றதும் சமாதியினின்றும் விழித்து, அப்பேரானந் தம் மனத்தில் நிரம்பி அடங்காது ததும்புவது போல, ஆனந்தக்கண்ணீர் ஆறாய்ப் பெருக, "ஐயனே! விண்ணவர்க்கும் நண்ணுதற்கரிய இந்நிலையினை அருளியதற்கு எளியேன் செய்யும் கைம்மாறும் உண்டோ? இந்நிலையிலேயே யான் என்ஞான்றும் தவறாது நிற்குமாறு அருள்

புரிய வேண்டும்,'' எனப் போற்றினர். அது கண்ட ஆசானும், "எல்லாம் உணர்ந்த சுந்தரரே! உலகிற்கு இந் நிலையினை உணர்த்துவதற்கே இத் திருமேனியைத் தரித்த உமக்கு வேறு ஒருவர் அநுக்கிரஹம் செய்ய வேண்டுவதும் உண்டோ? சம்பிரதாயத்தை இவ்வுலகுக்கு விளக்கவன்றோ நீர் எம்மையடைந்ததும் நான் உமக்கு உபதேசம் தந்ததும்" என்றருளினர்.

சிலநாள் ஆசிரியர் சந்நிதானத்திலே யிருந்து அவர் திருத்தொண்டை அன்போடும் செய்து, ஆசிரியரது உள்ளத்தை மகிழ்வித்தார். அப்பால் அன்னாரது ஆணையின்படி பத்தமடை வந்து, தமது மனைவியாரையும் தம்மைப்போலவே முக்திநெறியிலே முயில்வித்து, பல்லாயிரம் மாணவர்களைப் போலவே அவரையும் ஒரு மாணவராக்கி, தாம் அடைந்த நிலையையே அவருக்கும் உபதேசித்து, முன்போலவே அநுதினமும் சிவபூஜை செய்தும், ஸமாதி புரிந்தும், சிவாலய தரிசனம், சிவபஜனை, சிவகதாப் பிரசங்கம் செய்தும், தம்மை யடைந்தவர்களுக்கு

ஞானோபதேசம் செய்தும் சாஸ்திரார்த்தங்களைச் சிரவணம் செய்வித்தும் வந்தார். இச் செயல்களெல்லாம் சிவ சொரூபமெனக் கண்ட சிவனார் அபேத உணர்வு கொண்டு ஆத்மானந்த அனுபூதியில் ஈடுபட்டுக் காலங்கழித்து வந்தனர்.

## மூன்றாவது அத்தியாயம்
## தீர்த்த யாத்திரை

அப்பால் சுந்தரசிவனார் தாம்பிரபரணி தீரத்தில் உள்ள ஸ்தலங்களையும், தீர்த்தங்களையும் தரிசித்துத் தீர்த்தமாட விருப்பங்கொண்டு பக்தகோஷ்டிகளுடன் தீர்த்த யாத்திரை செய்யத்தொடங்கினர். பொதிகாசலம், பாணதீர்த்தம், கல்யாண தீர்த்தம், பாபவிநாசம் முதல் திருச்செந்தூர் முடிய விளங்கும் எல்லா தீர்த்தமும் ஆடப்பெற்றன. தாமிரபரணியின் இரு கரைகளிலும் விளங்கும் க்ஷேத்திரங்கள் யாவும் தரிசிக்கப்பெற்றன. சுந்தர சிவனார் செல்லும் இடந்தோறும் ஆங்காங்கு ஜனங்களெல்லாம் பரமானந்தக் கடலாட, சிவபஜனை, சூதஸம்ஹிதாப் பிரசங்கம் முதலியன புரிந்து தீர்த்தயாத்திரையைப்

பூர்த்தி செய்து மீண்டும் தமது வாஸ ஸ்தானத்தை யடைந்து முன்போலவே வசித்து வந்தனர்.

## குருபரம்பரை

குருவினிடத்தும் குருமூர்த்தியை அருள் செய்யும் ஞானத்தாயாகிய ஸ்ரீ காந்திமதியம்மையினிடத்தும் சுந்தரர்க்குச் சிறந்த பக்தியுண்டாதலின் அடிக்கடி அடைச்சாணி சென்று ஞானாசிரியரைத் தரிசித்தலும், நெல்லையம்பதிக்குச் (திருநெல்வேலிக்கு) சென்று ஸ்ரீ காந்திமதியம்மையையும் நெல்லையப்பனையும் தரிசித்தலும் அவர்க்கு இயற்கையாயிற்று. அங்ஙனம் அடைச்சாணிக்குப் போய் வரு நாளில் ஒரு தினம் ஞானாசிரியரைப் பணிந்து, "ஸ்வாமி! நமது குருபரம்பரை முறையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்," என்று வேண்ட ஆசிரியரும் மகிழ்ந்து ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி முதல் தமது குருமூர்த்தியாகிய ஆம்பூர் இராமசந்திர சாஸ்திரிகள் வரை பரம் பரையைக் கூறி குருபுத்திராகிய சோமசுந்தர சாஸ்திரிகளும் தாமும் ஒருங்கு ஆசிரியர் அருள் பெற்றவர் எனவும் கூறினர்.

## உத்தர தேச யாத்திரை

பின்னர் தமது ஊர் வந்து வசித்து வரும் நாளில், உத்தர தேச யாத்திரை செய்யவேண்டும் என்ற ஆசை உண்டாகவே, பல உத்தம பக்தர்களுடன் புறப்பட்டு, மதுரை, ஜம்புகேசுவரம், திருவையாறு, மாயூரம், சீர்காழி, சிதம்பரம் சுவேதாரண்யம், விருத்தாரண்யம், விருத்தாசலம், ஸ்ரீ காளஹஸ்தி முதலிய திவ்விய க்ஷேத்திரங்களைத் தரிசித்த வண்ணம் ஸ்ரீ காசியை யடைந்தார் ஸ்ரீ சுந்தரர். சுந்தரர் கங்கா தீரத்தில் ஸ்நானம் செய்யும் பொழுது, வழக்கம்போல் ஆறு மாதம் ஜலத்திற்குள்ளேயே சமாதியிலிருந்த **மகாகணபதி** என்ற யதீந்திரர் இவரைக்கண்டு மகிழ்ந்து இருவரும் ஜலத்திற்குள்ளேயே கட்டிக் கொண்டதாகவும், அச்சமயம் பெரும் ஜோதி ஒன்று எழும்பியது என்றும் சொல்லப்படுகிறது. இவ்விரு மகான்களின் சிலைகள் இன்றும் மணிகர்ணிகா கட்டத்தில் பிரகாசிப்பதை யாவரும் சென்று கண்டு வணங்குகின்றனர். சிவனார் கங்கை முதலாய பல தீர்த்தங்கள்

ஆடியும் ஸ்ரீ விசுவேசுவரப் பெருமானை யும் விசாலமான கண்களால் விரிந்த அருட்பார்வை செய்யும் விசாலாக்ஷியம் மையையும் விருப்போடு தரிசித்தும் மகிழ்ந் தனர். அப்பால் முறைப்படி யாத்திரை முடித்துத் தமது வாஸஸ்தலம் வந்து சேர்ந்தனர்.

தாம் கங்காயாத்திரை செய்த காலத் தில் தமது ஞானசிரியர் பரிபூரண சமாதி பெற்றதாக அறிந்து, ஆசிரியர் வசித்த ஸ்தலம் அடைந்து அவர்கள் சமாதியைத் தரிசித்து, விருத்தாந்தம் யாவும் குருபுத்திர ரான சோமசுந்தர சாஸ்திரிகள் மூலம் தெரிந்துகொண்டு, மீண்டும் பத்தமடை வந்தடைந்தார்.

அன்று முதல் சுந்தரசிவனர் சகஜ நிஷ்டையில் விருப்புற்று மௌனவிரதத் துடன் சிலகாலம் கழித்தனர். அவ் விரதம் நீங்கிய பின்னர், கோடகநல்லூர் இராமசுவாமி சிவன் முதலான சில வைதிகப் பெரியார் வந்து அவரைத் தரிசித்து, "சிவமே, எம்மூரில் உள்ளாரும் உய்யுமாறு விஜயம் செய்து, சூதஸம்ஹி

தாப்படனம் நடத்தி அனுக்கிரஹிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தனர். சிவனரும் பக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். கோடகநல்லூர் சென்று பஞ்சாஹம் என்ற முறைப்படி ஐந்து நாள் முற்பகலில் நித்திய அனுஷ்டானங்களை முடித்தவுடன், சபைத்தலைவர் ஒரு சிறந்த ஆசனத்தில் வீற்றிருக்க, ஒரு சாஸ்திரிகள் மூலம் சூதஸம்ஹிதையைப் படனம் செய்வித்தார். இடையிடையே படித்ததின் தாத்பரியத்தை அக்ராசனதிபதி விளக்கிப் பிரசங்கிப்பார். ஐந்து நாளும் இரவும் பகலும் பிராமண போஜனமும் சிவபஜனம் இரவிலும் நடைபெற்றன. சிவனரின் கதாப் பிரசங்கத்தையும் சிவபஜனைப் பிரபாவத்தையும் கண்ட கிராமவாசிகளும் மற்றும் பல சாம்பர்களும் "நாம் இன்றுதான் பெறற்கரிய இம்மானிடப் பிறவியின் பயனைப் பெற்றோம்' என வாய்விட்டுக் கூறி ஆனந்தக் கடலில் ஆழ்ந்தனர். சிவனவர்களின் ஆக்ஞையின்படி அங்குள்ளார் அவ்வூர்ச் சிவாலயத்தின் ஓர் பக்கலில் பஜனை மடம் ஒன்று ஸ்தாபித்து அன்று முதல்

தினமும் இரவில் சிவபஜனம் செய்து வந்தார்கள். இப்பொழுதும் இதே விதமாக, விஷ்ணுபாகவதத்தை ஸப்தாஹம் என்ற ஏழுநாள் முறையிலும், தேவீபாகவதத்தை நவாஹம் என்ற ஒன்பது நாள் முறையிலும் படனம்செய்வது தாமிரபர்ணி தீரத்தில் நடப்பதுண்டு.

## மாண்டவர் மீண்டனர்

பத்தமடையில் ஒரு சமயம் எக்ஞேசுவரன் எனும் பெயர் வாய்ந்த ஐந்து வயதுள்ள ஓர் அந்தணக்குழந்தை வாய்க்காலில் வீழ்ந்து போயிற்று. அக்குழந்தையின் பெற்றோர் இரவெல்லாம் தேடியும் காணாது மறுநாள் பிற்பகலில் கண்டெடுத்து என்ன செய்தும் குழந்தை விழிக்கவில்லை. அதனால் அன்னார் துக்கித்துக் கொண்டிருக்கையில் சுந்தர சிவனார் அங்குவந்து 'ஒருவரும் அழாதீர்' என்று அபயமொழி தந்தார். பிறகு தமது திருக்கரத்தால் குழந்தையின் திருமேனியைத் தாங்கி ஒரு தனி இடத்திற்குச் சென்று குழந்தையின் சடலத்தில் மந்திர ஜலம் தெளித்தார். அதன் நெற்றியில்

விபூதி இட்டு, சிவபிரானைச் சில சுலோகங்களால் உள்ளங்குளிரத் துதித்தார். துதிக்கவே, தூங்கி எழுவது போல அக்குழந்தை விழித்துச் சுந்தரரைச் சுந்தரமாகப் பார்த்தது. மாண்டவர் மீண்டனர் என்றால் யார் தான் மகிழ்ச்சியுறார்! அக்குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு சிவனார் வெளிவந்ததைக்கண்ட அக்குழந்தையின் பெற்றோரும் ஸ்ரீ சுந்தர சிவனாரின் மாதுலரும் மிக்க ஆச்சரியமுற்று 'சிவனே இவர்' எனச் சாஷ்டாங்கமாக வணங்கிப் புகழ்ந்து கொண்டாடி ஆனந்தித்தனர்.

## சிவனாரின் துறவு

பின்னர் சுத்தமல்லி கிராமவாசியாகிய சூரியநாராயண சிவன் முதலாய பிராமணோத்தமர்கள் அழைப்பிற்கிணங்க, சுந்தரசிவனார் அவ்விடம் சென்று சூதஸம்ஹிதாப்படனம் பஞ்சாஹ முறையிற் செய்தனர். சிவனாரின் புண்ணியப் புகழ் கேட்டுப் பற்பல கிராமங்களினின்றும் சைவசிகாமணிகள் வந்து கூடினர். சூரியநாராயண சிவன் சூதஸம்ஹிதை மூலஸ்லோகங்களை

வாசிக்க, ஸ்ரீ சிவனவர்கள் அதன் பொருள் பிரசங்க மழை பொழிய, கடையம் சேஷாசல தீக்ஷிதர் முதலிய வைதிக சிரேஷ்டர்கள் அருகிருந்து கேட்க, முதல்நாள் படனம் நடந்தது. இரண்டாம் நாள் அங்ஙனம் படனம் தொடங்கி பிரசங்கம் நடக்கும் மத்தியில், சுந்தரசிவனார். சேஷாசல தீக்ஷிதரை நோக்கிப் பொருளுரைக்குமாறு கண்ணால் சமிக்கை செய்து வெளியே வந்து சிகை, எக்ஞோபவீதம் என்ற இரண்டையும் களைந்தெறிந்து வித்வத் ஸந்யாசம் கொண்டு, சபைக்குள் பிரவேசித்து மீண்டும் பிரசங்கத்தைத் தொடங்கினார். சபையிலுள்ளோர் யாவரும் ஆச்சரியப்பட, சிவனார் எப்பொழுது வைராக்கியம் ஜனிக்கிறதோ அப்பொழுதே சன்யாஸம் கொள்ள வேண்டும் என்று வேதம் முறையிடுவதை அவர்களுக்கு எடுத்துரைத்தார். ஸ்வாமிகளின் வாயிலாய் சாஸ்திரப் பொருள்களைச் செவியேற்றுப் பேரானந்தம் கொண்டு சபையிலுள்ளோர் ஸ்வாமிகளின் பெருமையை வியந்து வணங்கித் துதித்தனர். அன்று பிராமண போஜ

னம் முடிந்தவுடன் ஸ்வாமிகள் கோடக நல்லூர் ராமசிவன், நீலகண்டய்யர் முதலிய பக்தர்களை வரவழைத்துத் தாம் பூஜித்து வந்த பாணலிங்கத்தையும் மற்ற விக்கிரகங்களையும் அவர் கையில் கொடுத்து, நீங்கள் இம் மூர்த்திகளைப் பஜனை சபையில் வைத்துப் பூஜித்துப் பஜனை செய்து வாருங்கள் எனக் கட்டளையிட்டனர். அவர்களும் "அப்படியே" என்றார்கள். பின்னர் மூன்று நாள் படனமும் செய்து பிரசங்கத்தைப் பூர்த்தி செய்து ஸ்வாமிகள் திருநெல்வேலி வந்து ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்தில் வாசம்செய்தார். அரிய வேதாந்தங்களால் புகழப்படுகின்ற அந்தப்பரம் பொருளை அறிந்த பின் கொள்கின்ற மெய்த் துறவு பெற்ற துறவிகளில் முதன்மை பெற்றோர் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள்.

## நான்காவது அத்தியாயம்

## ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள்.

இக்காலத்தில் ஸ்வாமிகளுக்கு வயது 23 தான். இதுமுதல் குடும்ப பரணத்துக்குரிய கவலைகள் முற்றும் நீங்கவே, சம்சாரக் கடலில் கிடந்துழலும் மானிடரைத் தமது உபதேசத்தாலும்

பிரசங்கத்தாலும் உய்விப்பதே தமது பொறுப்பாகக் கொண்டார். திருநெல்வேலியில் ஆசாரிய மடத்திலேயே சூத ஸம்ஹிதாப் படனமாரம்பித்துப் பிரசங்கித்தார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டானந்தித்தனர். அக்காலத்தில் தான் மாவடிச் சிதம்பர பிள்ளை, சதாசிவ தருவாடியார், கிருஷ்ண தருவாடியார் முதலியோர் ஸ்வாமிகளின் தொண்டர்களாகி சிவானுபவச் செல்வராய் விளங்கினர். மடத்திலும் சுத்தமல்லி சூரிய நாராயணசிவன் மூல ஸ்லோகங்களைப் படிப்பார். ஸ்வாமிகள் வாக்கியார்த்தப் பிரவசனம் செய்வார். இரவில் சிவ பஜனமும் சேஷாசல தீக்ஷதர் கதாப் பிரசங்கமும் நடைபெறும். அதன்பின் சதாசிவ தருவாடியார் முதலியோரின் பிரார்த்தனைக்கிணங்க பற்பல கிராமங்களிலும் ஸ்வாமிகளும் விஜயம் செய்து படனம் நடத்தி, சகல ஜனங்களுக்கும் சிவபக்தி பெருகுமாறு கருணை புரிந்தார்.

## நாணற்புதரில் நிஷ்டை.

பிறகு சிறிது காலம் நிஷ்டையிலிருக்க எண்ணி, கோடகநல்லூர் வந்து, அங்கு

தாமிரபர்ணி நதியின் கரையிலுள்ள நாணற்காடுகளுள் பிரவேசித்து சமாதி நிலை அனுஷ்டித்து வந்தார். அக்காலத்தில் கோடகநல்லூர் பிராமணோத்தமர்கள் தர்ப்பை மூடுதோறும் சென்று ஸ்வாமிகளைத் தேடித் திருவமுது செய்வித்துச் செல்வர். பசி வந்தபொழுது தான் வெளி வந்து, எவராவது அன்னங் கொண்டு வந்து காத்திருந்தால் அதில் சில கவளங்களையுண்டு திரும்பியும் நாணற் புதர்களில் புகுவர். அடைதற்கரிய நிலையைப் பெற்ற ஸ்வாமிகளுக்கு அன்புடன் சென்று அமுது செய்விக்கும் பாக்கியம் பெற்ற இவ் வந்தணர் பெருமையே பெருமை. கடவுளின் அம்சம் நிறைந்து நடமாடும் கோயிலாகிய ஞானிகளுக்கு ஒரு வேளை உணவு அளித்தற்கு நிகரான புண்ணியம் வேறில்லை என்றார் திருமூல நாயனாரும்.

## மாதேவன் அன்னம் இடுதல்.

இவ்வாறு நடந்துவரும் நாளில் ஒரு நாள் ஒருவரும் அன்னம் கொணரா திருக்க, 'கொடுக்கச் சிவனுண்டு' என்பதற்

கேற்ப, பொன்னம்பலத்தான் ஓர் அந்தணன் உருக்கொண்டு சுந்தரர் நிஷ்டை புரியும் நாணற்புதரை நண்ணி, வேதம் பகர்ந்த தனது திருவாயால் 'ஸ்வாமி! ஸ்வாமி!!' எனப் பன்முறை விளித்தான். செவிக்கினிய சொற்கேட்ட சுந்தரர் சமாதி தெளிந்து வர, அவர்க்கு அன்னமூட்டி உரையாடிக் கொண்டிருக்கையில், இருந்த இடத்திலே தனது திருவுருவத்தோடு மறைந்தான் மறைகளால் தேடப்பெறும் மாதேவன். அதனை உணர்ந்த சுந்தரர், "ஐயனே, துய்யனே, மெய்யனே! ஞாலம், இந்திரன், நான்முகன், வானவர் உன்னைக்காணாது நிற்க, என்னை நயந்து அடியேனை ஆண்ட நின் பெருமைக்கு நாயேன் நவிலும் முகமன் என்னே!" என உள்ளம் உருகி நாவினால் துதித்து முன்போலவே சமாதி செய்து வந்தனர். அக்காலத்தில் ஸ்வாமிகள் செய்த வடமொழித் துதி படிக்கத் தக்கது. இவ்வாறு அரிய செயலினராய் அந்த நாணற்காட்டில் வாழ்ந்த சுந்தரர்க்குக் கோடகநல்லூர் ஸ்வாமிகள் எனப் பெயர் வந்தது. இஃதெல்லாம்

நடந்தது ஸ்வாமிகளது முப்பதாவது வயதிற்குள். அவ்வருஷம் வைகாசி மாதத்தில் ஸ்வாமிகள் நெல்லையம்பதிக்கு விஜயம் செய்து அங்குள்ள அன்பர்களை "நடராஜன் படத்தை அனுதினமும் அன்புடன் பூசித்துவாருங்கள்" எனக் கட்டளையிட்டனர். அங்ஙனமே தருவாடியார் முதலானவர்கள் ஒரு பஜனைமடம் கட்டி ஸ்வாமிகளின் திருவுளக்குறிப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஸ்வாமிகள் அந்த மடத்தில் சிலகாலம் வசித்தார்கள். பின்னர் ஆடி மாசத்தில் கம்பா நதிக் கரையில் வசித்தார்கள்.

அவ்வாண்டு ஐப்பசி மாதத்தில் ஸ்ரீ காந்திமதியம்மையின் மஹோத்சவ காலத்தில் ஏழாம் திருவிழாவில் அம்பிகையைத் தவழும் குழந்தையாகிய பாலாம்பிகை வடிவமாகவும், எட்டாம் திருவிழாவில் திருக்கோலாட்டமிடும் திருமகள் போன்றும் அலங்காரம் செய்ய ஆஞ்ஞாபித்தார். அப்பொழுது ஒரு அன்பர் இரு தங்கக் கோல்கள் செய்து சமர்ப்பித்து அவ்விழா வருடந்தோறும் நடத்தி வருமாறு உரிய பொருளும்

அளித்தார். அவ்விழா அவ்வாறே இன்றும் நடந்தேறி வருகின்றது. வேண்டுதல் வேண்டாமை யில்லாத ஸ்வாமிகளுக்கு இச்செயல்களால் ஆவது ஒன்றுமில்லை. ஆனால் பிறர் இக்காட்சிகளைக் கண்டு களித்து பக்தி பரவசர்களாக வேண்டும் என்பதே அவர் கருத்து.

## வெந்தழல் வரவழைத்தமை.

அதன் பின் ஒரு சமயம் ஸ்வாமிகள் கம்பா நதிக்கரையில் வசிக்கும் போது தீபாவளி யன்று இராமசந்திர மேத்தா முதலான பக்தர்கள் பலர் வந்து தரிசித்துப் பேரானந்த முற்றிருக்கையில் ஸ்வாமிகள் போஜன விதியைத் திருவாய் மலர்ந்தருளும் சமயத்தில் வலது உள்ளங் கையில் அக்கினி இருக்கிறதென்றும் அதில் அன்னம்படும்படி புஜிக்கக் கூடாதென்றும், அங்ஙனம் செய்வது நீசர் போஜனத்துக்கு சமானம் என்றும் பிரசங்கித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் அத்தலத்தில் காமாக்ஷியைப்பூஜிக்கும் விருத்தராகிய சுப்பிரமணியபட்டர் என்பவர் அர்ச்சனைக்கு வேண்டிய பத்திரம்,

புஷ்பம், அரிசி முதலியவைகளும், தென்னங்கூந்தலில் அக்கினியும் கொண்டு வந்தார். மழை மிகுதியால் நெருப்பு அவிந்து போயிற்று. அப்பொழுது சுப்பிரமணியபட்டர் ஸ்வாமிகள் சந்நிதி வந்து, யான் கொணர்ந்த அக்கினி மழையால் அவிந்தமையால் சீடர்களைக்கொண்டு சிறிது அக்கினி அருள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். ஸ்வாமிகள் ஆவுடையப்ப பிள்ளையை நோக்கி தடிவீரன் கோயில் தெருவில் சென்று நெருப்பு எடுத்து வரும்படி ஆஞ்ஞாபிக்க, பக்கலிலிருந்த இராமச்சந்திரமேத்தா ஸ்வாமிகளைப் பார்த்து, "சற்று முன் ஸ்வாமிகள் செய்த உபன்னியாசத்தின்படி உள்ளங்கையில் உள்ள நெருப்பை வரவழைக்கக் கூடாதா?" எனக் கேட்டார். ஸ்வாமிகளும், "வரவழைப்போம்; உமது உத்தரீயத்தைக் கொடுப்பீரா!" என, மேத்தாவும் அதற்கிசைந்து அன்று உடுத்த கோடி வஸ்திரத்தை அளித்தார். அதனை வாங்கி ஸ்வாமிகள் தமது உள்ளங்கையில் தேய்த்ததும் குபீரென அக்கினி பற்றியது. மேத்தா தான் அளித்த வஸ்திரம் விலை

உயர்ந்தது என்று அக்கினியை அவிக்க முயன்றார். ஆனால் ஸ்வாமிகள் மேத்தாவைப் பார்த்து, "அக்கினி பகவான் பற்றிக் கொண்டதை அவருக்குத் திருப்தியாகக் கொடுத்துவிடும்" என்று கூற, மேத்தாவும் வாளா விருந்துவிட்டார். பின்னர் ஆதிசைவசிகாமணி அந்நெருப்பினின்றும் அக்கினி எடுத்து பூஜா காரியத்தில் உபயோகித்துக்கொண்டார். இதனைக் கண்டு அங்குள்ள பக்தர்களெல்லாம் ஆச்சரியமுற்று, 'அஷ்டமூர்த்தி வடிவான இவர்க்கு இஷ்டமுள்ள ஒரு வடிவத்தை வரவழைத்தல் அரிதன்று. இது இயற்கையே' எனப் புகழ்ந்து வணங்கினர். மேத்தாவும், "ஸ்வாமி! நாயேன் அறியாமையால் செய்த இவ்வபராதத்தைப் பொறுத்தருள வேண்டும்" எனப் பிரார்த்திக்க, ஸ்வாமிகளும் நகைத்து, "இது ஓர் வேடிக்கை; நீவிர் அஞ்சற்க" என்று கிருபை கூர்ந்தருளினர்.

## நெல்லையில் லட்ச தீபம்.

ஸ்வாமிகள் அப்பால் ஐப்பசி மாதத்தில் ஒரு நாள் மாலை பிரதோஷ தரி

சனத்திற்காக ஸ்ரீ காந்திமதியம்மை கோயிலிற் சென்று நெல்லையப்பனையும் கண்டு உள்ளங்களித்து உட்கோயிலை வலம் வரும்போது அங்கு அதிக தீபம் வைத்திருத்தலை நோக்கி அங்கிருந்தவர்களை, "இது கோயில் ஏற்பாடா? அல்லது வழிபாடா?" என்று வினவ, அவர்கள் 'அது கோவில் மணியம் சுப்பிரமணியபிள்ளையால் யாசகம் எடுத்து நிறைவேற்றப்பட்டது' என்றனர். ஸ்வாமிகள் விசாரித்ததை அறிந்து மணியமும் அங்கு வந்து சிரமேற் கைகூப்பிய வண்ணம் துதித்து, திருவடிகளில் பணிந்து நிற்க, "நீவிர் இக் கைங்கரியத்தை விடாது இயற்றி வாரும். எல்லாம் வல்ல இறைவன் உமக்கு எல்லா நலமும் தந்தருள்வான்" என்று ஸ்வாமிகள் ஆசிர்வதித்தனர். அப்பொழுது சுப்பிரமணியபிள்ளை மீண்டும் ஸ்வாமிகளைப் பணிந்து திரு அனந்தபுரத்தில் தைச் சங்கராந்தியில் நடக்கும் லட்சதீபம்போல் அத்தலத்திலும் ஒரு முறை இயற்றித் தரிசித்தல் வேண்டும் எனவும் ஸ்வாமிகளின் கருணையிருப்பின் நடக்கும் எனவும் கூறினர்.

ஸ்வாமிகள் அப்படியே யாகுக என்று கூறி, மறுநாள் மகாலிங்க தீக்ஷதர் முதலிய பண்டிதர்களை வரவழைத்து லட்சதீப விதியையும் சாஸ்திர முறைப்படி நடத்த வேண்டிய ஏற்பாடுகளையும் குறித்து சம்பாஷித்தனர். சுமார் ரூபாய் பதினையாயிரம் செல்லுமெனத் தெரிந்து, சதாசிவதருவாடியார், நெல்லையப்ப பிள்ளை, தளவாய் இராமசாமி முதலியார் முதலிய பக்தர்களுடன் திருநெல்லையைச் சூழ்ந்த கிராமங்களுக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்து, ஆண்டவனுக்கு லட்சதீபம் இடவேண்டும் எனக் குறிப்பிட்டனர், சுமார் இருபதினாயிரம் ரூபாய் கிடைத்தது. அதன்பின் பதினொரு தினம் மஹாருத்திராபிஷேகமும், வேத பாராயணம், இதிகாச புராணபடனம், சூதஸம்ஹிதாப்படனம், சந்தர்ப்பணை, நாநாவித வாத்திய கோஷம் முதலிய சிறப்புடனும் சிவபெருமானுக்கு அபிஷேக அர்ச்சனை புரிந்து, அன்று இரவு ஸ்ரீ பலிநாதரை எழுந்தருளுவித்தலும் லட்சதீப விழாவும் செய்து பக்தரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தனர்.

கி, பி. 1864-ம் வருஷம் தைமாதம் திங்கட்கிழமை அமாவாசை திருவோண நக்ஷத்திரமும் அர்த்தோதய புண்ணிய காலமும் கூடிய நன்னளில் நல்லோரால் ஆரம்பிக்கப்பெற்ற லட்சதீப விழா அன்று முதல் இன்று வரை ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடந்து வருகின்றது. அவ்வருஷம் லட்ச தீபத்தில் செலவானது போக எஞ்சிய பொருளை வெள்ளியங்கிரி வாசியான எம்பெருமானுக்கு திருவிளக்கேற்ற ஓர் தங்க தீபமும் வெள்ளித் தீபமும் செய்வதில் செலவிட்டனர். இரவில் விருஷபாரூடராக உற்சவ மூர்த்திகளை எழுந்தருளுவித்தது கண்கொள்ளாச் சேவை. அங்கு கூடிய பக்தர்களுக்கு யோக்கியதைக்குத் தக்கபடி வெகுமானம்.

## சித்தந் தெளிய சாதனம் சிவ பஜனை.

இவ்வாறு லட்ச தீபத்தைச் சிறப்பாக நடத்தி, திருநெல்வேலியில் சில நாள் பஜனை மடத்தில் வந்திருக்கையில், கோ. சிதம்பர பிள்ளை வந்து ஸ்வாமிகளின் திருவடிக்கமலங்களில் வணங்கி, தன்னையும்

ஆட்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தார். அதற்கு ஸ்வாமிகள், "அப்பா! அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால் பிறவாழி நீந்தல் அரிது. அரியும் அயனும் காணா அரனை வழிபட்டு பஜனை பண்ணுவதே உத்தமமாகும். பக்தியினலே பக்தி வளருவதன்றி வேறு சாதனத்தால் அன்று. அன்பை அன்பினல் வளர்த்து வரின், தற்போதம் இழந்து உண்மையான அனுபவானந்தம் அடைந்து, சகவடிவம் நீங்கி சுகவடிவமாகப் பிரகாசித்திருக்கலாம். சித்தம் உருகுவதற்குச் சிவபஜனையே சிறந்த சாதனம்'' என்று கூறி அப்பஜனை மடத்திலேயே இருத்தி, பஜனைகள் சரிவர நடத்துமாறு ஆக்ஞாபித்தார். பிள்ளையவர்களும் அவ்வாணையின் படி நடந்து ஆசிரியர் பாதத்தில் வீழ்ந்து அனுமதி பெற்று அளவிலா ஆனந்தம் பெற்றார்.

## ஐந்தாவது அத்தியாயம்

## ஸ்ரீ சுந்தரஸ்வாமிகளே மஹாஸந்நிதானம்

ஸ்வாமிகள் பஜனை மடத்தில் தங்கியிருந்தபொழுது சிருங்கேரி மடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் திருநெல்வேலியில் விஜயம் செய்தார். அச்சமயம் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் நீங்கலாக மற்ற யதீந்தரர் யாவரும் திருமுகம் பெற்று ஆசாரியாளைத் தரிசிக்க வந்திருக்கக் கண்டு, ஜகத்குரு அதன் காரணம் அறிந்து ஸ்ரீ சுந்தரரை அழைப்பித்து வரும்படி ஆஞ்ஞாபித்தார். சிஷ்யரில் ஒருவர் அவ்வாணையின்படி சென்று, வெகு சாதுரியமாய்ப்பேசி ஸ்வாமிகளை அழைத்துவர, ஜகத்குரு தானே சுந்தரரை அழைத்து ஓர் திரு ஆசனத்திலே அமர்த்தி, அங்கு ஸ்ரீ சுந்தரர்மேல் அபிப்பிராய பேதங் கொண்டு ஸ்ரீமுகம் அனுப்பாமலிருந்த சபையிலுள்ளோர் யாவரும் அறிய ஜகத்குரு ஸ்ரீ சுந்தரரின் மகிமையை விவரமாக எடுத்துரைத்தும், அவர் அவதார புருஷரே என்றும் திருவாய் மலர்ந்தருளினார்கள். இதைக் கேட்ட பிறகு யாவரும் பேதமை நீங்கப்பெற்று ஸ்வாமிகளின் பெருமையையறிந்தனர். ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளும் அன்று முதல் இன்றும் பலரால் மஹா

ஸந்நிதானம் என்றே வழங்கப்பட்டு வருகின்றார்.

### மலயமலைத் தவம்.

வேனில் வந்ததும் மஹா ஸந்நிதானம் பொதிகை மலை அடைந்த ஆங்குள்ள வனங்களிலே தனித்திருந்து தவம் செய்து தனிப் பொருளை நாட விரும்பினர். அவர் தவஞ் செய்தகாலை முனிவர் பெருமானொருவர் அங்கு வந்து சுந்தரர்க்குக் காட்சி தந்து சிறந்த செய்தி ஒன்றும் சொல்லிப் போயினர். அம்மஹா மந்திரத்தை உபதேசித்து மறைந்த மஹான் மறையவர் குலதிலகமும், மலய மலையின் தலைவரும், தமது ஒப்பற்ற ஞானத்தவவலிமையால் வையகமுழுமையும் வாழச் செய்தருளியவருமான அகஸ்தியரே என்று கூறு மலே விளங்கும் மலய மலையில் மனத்திற்கினிய தவம் புரிந்த பின்னர், மஹா ஸந்நிதானம் பல ஸ்தலங்களையும் வழியே தரிசித்துக் குறுக்குத் துறைவந்து சேர்ந்தார்.

### சர்வம் சிவமயம்

குமரவேள் வதியும் அக்குறுக்குத்துறையில் மஹாஸந்நிதானம் வசித்த காலத்



ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளின் பிரதம

சீடராகிய ஸ்ரீ பிச்சி சாமி என்று பெயர்

பின் வழங்கப்பட்ட

ஸ்ரீ திம்ம ராஜபுரம்

**சிவ சுவாமிகள்**

தில் திம்மராஜபுரம் சிவஸ்வாமிகள் என்பவர் வந்து ஸ்வாமிகளைத் தரிசித்து அனுக்கிரஹம் பெற்றுக் கூடவே வசித்து வந்தார். அனேக சீடர்கள் அங்கு வந்து அவரை காணும் பொழுது மஹா ஸந்நிதானம் அவரவர் பரிபாகத்துக்குத் தக்கபடி, சிலர்க்கு ஆடிப்பாடி உள்ளம் கசிந்துருகிப் பரமசிவன் திருவுருவைக்கண்டு களித்துத் துதித்துப் பஜனை செய்வதே உசிதம் என்றும், சிலர்க்கு, சிரவணம், மனனம், சிறந்தது என்றும், மற்றும் சிலர்க்கு சகுண மூர்த்தியைத் தியானித்து முறைப்படி உபாசித்தல் நல்லது என்றும் கூறினர். சில நாளைக்கெல்லாம் சேரை சௌந்தர பாண்டியன் பிள்ளை என்னும் ஓர் பக்தன் வந்து மஹா ஸந்நிதானத்தின் திருவடிகளை வணங்கி அடியேனை ஆட்கொண்டருள வேண்டுமென வேண்டினர். வேண்டுவார்க்கு வேண்டுவன அளிக்கும் மஹா ஸந்நிதானமும், "மைந்த! பிரம்ம ஞானம் ஒன்றே முக்திக்குரியது. அந்த மெய்யறிவை மெய்யறிவாலே காண வேண்டும். இருப்பதாகத் தோன்றலும், இன்பமாகக் காண்டலும், பலவுருவங்

கொண்டு பல பெயரால் அழைக்கப் படுதலுமாகிய பிரபஞ்சப் பொருள்களை உண்மையாகப் பார்க்கின் சிவத்தை யன்றி வேறு ஆகாது. சிவமே எல்லாம எனத் தேர்தலே மெய்யறிவாம்" என்றார்.

## அரிய அனுபவ ரஸயானம்.

'காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' என்ற ஒரு சிறு வாசகத்தைச் செவியுற்ற மாத்திரத்தில் உள்ளத் துறவு பெற்ற ஒப்பற்ற பட்டினத்தடிகள் போல் இவ்வடியாரும் மஹா ஸந்நிதானத்தின் உபதேசமொழிப்படி அக்கணமே அரிய பொருளை ஆராய்ந்து, எல்லாம் உண்மை யாய்ப் பார்க்கும் போது சிவமாய் விளங்கி நிற்றலை யுணர்ந்து, சித்தம் சிவமாகித் தேகவாசனை யற்று சமாதியுற்றார். அப்பால் நெடுநேரஞ் சென்று சமாதியினின்றும் விழித்து குருநாதரின் பொன்மலரில் பன்முறையும் பணிந்து, "ஸ்வாமி! உலகத்திற்கும் உபகாரமாகுமாறு ஸ்வானுபூதியை எளிதில் நன்குணர்த்தும் ஒரு நூல் செய்தருள வேண்டும்" எனப் பிரார்த்திக்க, மஹா ஸந்நிதானமும், அவ்வாறே

"ஸ்வானுபூதி ரஸாயனம்" என்னும் ஓர் அரிய நூலைச் செய்தருளினர். ரஸாயன ஔஷதம் உடலின் மூப்பு பிணிகளை அகற்றுவது போல் ஸ்வாமிகள் கொடுத்த ரஸாயனமும் ஆன்மாவின் பிறப்பு, இறப்பு, துன்பம், இவைகளை அகற்றுவதால் இதையும் உட்கொள்ளுதல் நலம் அன்றோ?

அக்காலத்தில் ஒரு நாளிரவு மஹா ஸந்நிதானம் அக்குறுக்குத்துறையின் ஒரு புறத்துள்ள மூங்கிற் பண்ணைக்குள் சமாதி செய்து கொண்டிருக்க, சௌந்தர பாண்டியன் பிள்ளை மஹா ஸந்நிதானத்தைப் பல இடங்களிலும் தேடிக்காணாது வருந்தும் சமயம் திருவருள் குறிக்கத் தெரிந்து மூங்கிற் பண்ணையருகில் வந்து ஸாஷ்டாங்கமாய்ப் பணிந்து நின்றதும் மஹாஸந்நிதானம் வெளிவந்து தரிசனம் தந்து உபதேசமொழி புகன்றனர்.

## மஹா ஸந்நிதானத்தின் புதுக்கோட்டை விஜயம்.

அப்பால் புதுக்கோட்டையில் வசிக்கும் ஒட்டுத்திண்ணைப் பரிதேசிகள் மஹாஸந்நி

தானத்தை வந்து தரிசிப்பதற்கு விரும்புவதைத் தெரிந்து அடியார்களுக்கு உரிய திருமேனிகளாகிய மஹா ஸந்நிதானம் அன்றிரவே புதுகோட்டைக்குப் புறப்பட்டனர். மறு நாட்காலையில் வழக்கம்போல் பாண்டியன் பிள்ளை மஹாஸந்நிதானத்தைப் பார்க்க வந்து காணாது, தாயைப் பிரிந்த கன்றைப்போல் உள்ளந் தளர்ந்து, தருவாடியார் இல்லம் சேர்ந்து மஹா ஸந்நிதானம் புதுவை சென்ற செய்தியைக் கேட்டு உடன் விரைந்து தானும் புதுவை சேர்ந்தார்.

புதுவைக்கு மஹாஸந்நிதானம் விஜயம் செய்திருப்பதைக்கேட்ட அப்பதியின்கண் வசிக்கும் பக்த சிகாமணியாகிய ராமசாஸ்திரிகள் மஹாஸந்நிதானத்தை அடைந்து அனுக்கிரஹம் பெற்றுச் சுவானுபவச் செல்வராய் உத்தம சிஷ்யராய் விளங்கிய சாஸ்திரிகளின் குடும்பத்தினர் யாவரும் மஹா ஸந்நிதானத்தின் பேரன்புக்கு பெரிதும் ஈடுபட்டனர். பின்னர், சுப்பராய சிவன், ராமுபாகவதர், ராமஸ்வாமி சாஸ்திரிகள், அப்புநாயகர் முதலிய எல்லாரும் கூடி மஹா ஸந்நிதானத்தைப்

போற்றிஸூதஸம்ஹிதாப்பிரசங்கத்தை ஐந்து நாளில் நடத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். மஹா ஸந்நிதானமும் தமிழ்நாட்டில் தனியரசர் நாடாகிய புதுவையம்பதியில் தென்னாடு, வடநாடு முதலிய பன்னாடுகளிலிருந்தும் வந்து சூழ்ந்திருந்த வித்வஜன மண்டபத்தின் நடுவே வீராசனத்தில் அமர்ந்து வேதப்பொருள் நிறைந்த ஸூதஸம்ஹிதையின் செம்பொருளைச் சொல்லலுற்றார்.

## ஸ்திரீகள் ஞானம் பெறுதற்கு உரியர்.

அத்தருணத்தில் ஆங்குச் சிரவணம் செய்து வந்த சில வேதியர்கள் ஸ்திரீகளுக்கும் சூத்திரருக்கும் ஞான விசாரத்தில் அதிகாரம் கிடையாதெனச் சுருதியில் சொல்லப்பட்டிருக்க, ஈசுவரப்பிரஸாதத்தால் ஞானம் எல்லோர்க்கும் எளிதில் கிடைக்கும் என்று மஹா ஸந்நிதானம் சொல்வது எங்ஙனம் பொருந்தும் என்று அவர் காதில் படும்படி வாதித்தனர். அப்பொழுது "இச் சந்தேகத்தை இறைவனே இங்கு நிவிர்த்திப்பான்'' என்று மஹா ஸந்நிதானம் கூறினார். அந்தசமயத்தில்

ராமஸ்வாமி சாஸ்திரிகள் ஐந்து வயதுள்ள சிவகாமிஎன்னும் தம் பெண்ணைக் கையிற் பிடித்துக் கொண்டு மஹாஸந்நிதானத் தைத் தம் இல்லத்தில் பிக்ஷை கொள்ளு மாறு அழைத்தார். மஹாஸந்நிதானம் அக் குழந்தையைத் தமது இடதுகையால் பிடித் தழைத்து, "குழந்தாய்! உனக்கு என்ன வேண்டும்" எனக் கேட்டார். அக்குழந்தை யும் "பெரியாரைத் தரிசித்தலையும் ஞானனந்தத்தில் மூழ்க வேண்டு வதையும் தவிர்த்து வேறே வேண்டு வது என்ன ?" என விடையளித்தது. மஹாஸந்நிதானம் அவ்வாறே ஆகுக என வாக்களித்துத் தம் வலது கையினுல் குழந் தையின் நெற்றியில் விபூதியிட்டுச் சின் முத்திரை செய்வித்து வீட்டினையளிக்கும் ஒரு மொழி உபதேசித்து வீட்டிற்கு அனுப்ப, வீடு வந்ததும் அக்குழந்தை உபதேசித்த மொழிகளைச் சிந்தித்துச் சமாதியில் அமர்ந்தது.

இரு ஜாமங்களாகியும் குழந்தை விழிக்க வில்லை. பலர் விரும்பிப் பார்த்தும் வெளி உலக விவகாரத்திற்கு அது வர வில்லை. இதை எல்லோரும் தரிசித்து

ஆச்சரிய கூச்சலுடன் தம்மனத்திலுள்ள அழுக்குகள் நீங்கி மஹாஸந்நிதானத்தின் அரிய உரைக்கு எதிர் உரையாடிய பெரும் பிழையை உணர்ந்து உள்ளம் உருகி ஞான அதிகாரி முறை தெரிந்து ஆனந்த பரவசமாயினர். மாத்தியான்னிக காலம் வந்ததும் எல்லோரும் பூஜானுஷ்டானத்திற்குச் சென்றூர்கள். குழந்தை எழுந்திருக்கவேண்டுமென எதிர்பார்த்ததில் போஜன காலமும் சென்றதால் அப்போது அவ்விடம் வந்திருந்த வெங்கு சாஸ்திரிகள் குச்சியில் துணியைச் சுற்றி மூக்கில் இட்டார். குழந்தை கொஞ்சம் கண்ணைத்திறந்தும் விழிக்க மனமில்லை யென உணர்த்துவதாய் முன்போல் கண்களை மூடிக்கொண்டது. பின்னர் மஹாஸந்நிதானம் அங்கு விஜயம் செய்து தமது அன்பார்ந்த சீதள கரத்தால் குழந்தையைத் தடவி, ஆகாரம் கொடுத்து பிரக்ஞை வரும்படி செய்தார். அக்குழந்தையின் மாதாபிதாக்கள் மஹாஸந்நிதானத்தைப் பணிந்து, "ஸ்வாமி! போதும். தேவரீர் கருணை கூர்ந்து குழந்தையைக் காப்பாற்றும்" என

வேண்ட, குழந்தை எழுந்து விளையாடத் தொடங்கியது. அக்குழந்தை அந்த அனுக்கிரஹத்தை மறவாது திருச்சிராப்பள்ளிப் புன்னைவாயிலில் திவ்விய சரணஸ்மிருதியோடு இன்றும் சுகமாக வாழ்கின்றுளாம். இவ் வைபவம் முதல் நாள் பிரசங்கத்தில் நடந்தது.

## இரண்டாம் நாள் படலம்.

மறுநாள் பிரசங்கமும் நடைபெற்றது. அன்று ராமஸ்வாமி சாஸ்திரிகள் வண்டிக்காரனை அரங்கக்கோன் என்பவன் பிரசங்க மத்தியில் மாஹாஸந்நிதானத்தின் பாதங்களில் வீழ்ந்து பக்தி மேம்பாட்டால் உள்ளங் குழைந்து, ஆனந்த நர்த்தனஞ் செய்தான். மேலும், 'யான் பிரம்ம ஸ்வரூபம்' என்று உரக்க மொழிந்து வேதாந்த தத்துவங்களை விளக்கினும். இவ்விரு சம்பவங்களால் முன்னைச் சங்கித்தவர் எல்லாரும் ஐயம் நீங்கப்பெற்று, ஜீவநதிகளில் வருணனது கருணையினுல் பெருவெள்ளம் புரண்டு வரும்பொழுது இருகரைகளிலுள்ள பள்ளங்களிலும் ஊற்றுப் பெருக்கெடுத்துத் தம் மீதுள்ள பொருள்

களையும் இழுத்து விரைந்து சென்று சேர்தல் போல, ஜீவன்முக்தர்களது பெருங்கருணைப் பிரவாக அருட்பார்வை பதிந்தவர்கள் உள்ளங்களில் சிவபக்தி என்னும் அருள் மாரி பொழியப் பெற்றுத் தம் இல்லம் சென்றனர். இவ்வுரைகளின் உண்மையை விளக்க, மஹா ஸந்நிதானம் ஸ்திரீகளையும் சூத்திரர்களையும் சீடராய் அங்கீகரித்து அவர்களுக்கு ஞானம் புகட்டி யிருக்கிறார். இவ்வாறு சூதஸம்ஹிதாப்படனம் ஐந்து நாளும் நடந்தேறியது.

வேதாந்த சூத்திர பாஷ்யத்தில் ஸ்ரீ சங்கர பகவத்பாதர் கூறிய வண்ணம், அந்தணன் நான்கு வருணத்தாருக்கும் வித்தியாதானம் செய்யவேண்டியவன் என்று கூறப்படவில்லையா? இதிகாச புராணங்கள் நான்காவது வருணத்தாருக்கும் தத்துவங்களை விளக்கவன்றோ ஏற்பட்டன. உபநயனம் என்ற ஸம்ஸ்காரம் பெற்று பிரம்மசாரிய விரதத்துடன் குருகுலவாசம் செய்து வேதத்தை அத்தியயனம் செய்வது துவிஜர்களுக்குமாத்திரம் உரியது. ஏனையோர் தத்துவங்களைப்

பெரியோரிடம் கற்றுணர்வதற்குப் பாத்திரரேயாவர். சூத்திரராய்ப் பிறந்தும் பூர்வ ஜன்ம ஸம்ஸ்கார வசத்தால் தத்துவ ஞான மடைந்த விதுரரையும் தருமவியாதனையும் பகவத்பாதர் எடுத்து உதாஹரிக்கிறார். சூத்திரர் என்று வியவகரிக்கப் பட்ட அப்பர் ஸ்வாமிகள் தற்காலத்திலும் தெய்வமாக அந்தணராலும் ஆதரிக்கப் படவில்லையா? கணப்பொழுதில் சிவ லிங்கத்தினிடம் பேரன்புமிகுந்து தன் கண்ணைப் பறிகொடுத்த வேடுவரின் பக்தியாவது வைராக்கியமாவது அல்லது அவ்விரண்டாலும் உதித்த ஞானமாவது கல்வியால் வந்ததா? இல்லை. முற்பிறப் பின் தவப்பயனே யன்றோ? ஆதலின் ஆடவரும் பெண்டிரும், யாவரும் ஞானம் பெறுவதற்கு உரியவராம் என்று ஏற் படுகின்றது.

## சிற்சபேசரின் சீரிய உருவப்படம்.

இவ்வாறு மஹாஸந்நிதானம் புதுக் கோட்டையில் வசித்து வருங்கால் அரிமளம் சிவராமன் செட்டியாரும் புதுவயல் அழகப்ப செட்டியாரும் அவரது மஹிமை

யைக் கேள்விப்பட்டு, இருவரும் வந்து தரிசித்துச் சீடராகி உபதேசம் பெற்று உடன் வசித்துப் பணிவிடை இயற்றிக் கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் தஞ்சையிலிருந்து ஒரு வியாபாரி தில்லைத் திரு நடனக் காட்சி வரைந்த படமொன்றைக் கொணர, அதைக் கண்ட மஹாஸந்நிதானம் உவந்து அது பூஜைக்கு உரியதென்றார். திருவுளக் கருத்து அறிந்த சீடர் சிவராமன் செட்டியார் அதனை உரிய விலைகொடுத்து வாங்கி மஹாஸந்நிதானத்திடம் சமர்ப்பித்தனர். மஹாஸந்நிதானமும் தில்லைநாதன் திருவுருப் படத்தைத் திருநெல்வேலி பஜனை மடத்தில் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யக் கருதி, மாணாக்கருடன் திருநெல்வேலி சென்று படத்தைப் பிரதிஷ்டை செய்து சிதம்பரம் பிள்ளையவர்களை பஜனை, பூஜை முதலானவைகளைச் செய்து வரும்படி ஆக்ஞாபித்து ஆங்குச் சிலநாள் தங்கினர்.

## தன் செயல்களுக்கு ஓர் பிரமாணம்.

புதுக்கோட்டையில் வசிக்கும்பொழுது மற்றும் ஓர் நிகழ்ச்சி நடந்தது. அவரது

புகழைக் கேள்வியுற்றுப் பல திசைகளி னின்றும் பக்த கணங்கள் வந்து நிறைந் தனர். அவர்களுள் சேஷப்பா என்னும் ஓர் பிராமணர் மஹாஸந்நிதானத்திடம் வந்து, "நீர் செய்யும் செயல்கள் யாவும் ஜாலங்கள். ஜனங்கள் உமது பிரமத்தில் அகப்பட்டுக் கெடும்படி சக்திநிபாதம் என்னும் வியாஜத்தால் துள்ளி விழுகிறீர். இதை இன்று முதல் நிறுத்த வேண்டும். அல்லது, அனுபவப் பிரமாணத்தால் நிரூ பிக்கவேண்டும்" என்று கூறினார். இதைக் கேட்ட மஹாஸந்நிதானம் சிறிதும் கோபமடையாமல் சேய்மொழி கேட்ட தாயைப்போல் அத்தருணமே அவியாஜ கருணையால் அந்த சேஷப்பாவைக் கடாக்ஷ தீக்ஷை செய்ய அவரது சரீரம் அந்த வீட்டில் போட்டிருந்த தாதுவளம் பந்தலின்மேல் சக்தி நிபாதத்தால் துள்ளிவிழுந்தது. அரைமுகூர்த்தம் வரை எழுந்திருக்கவேயில்லை. அதனைக்கண்ட யாவரும் அதிசய முற்றனர். அப்பால் விழிப்புற்ற சேஷப்பாவும் ஆனந்த பாஷ்பம் உதிரும் கண்களோடு மஹா ஸந்நிதானத்தின் திருவடிகளில் வீழ்ந்து

சுத்தஸத்வ குணம் பெற்று, உள்ளம் உருகி உத்தம பக்தருள் தாமும் ஒருவ ராஞர்.

## திவ்விய ரதம்.

அதன் பின்னர் மஹாஸந்நிதானம் தம் அன்பர்களுடன் ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரம் அடைந்து குஞ்சிதபாதரைத் தரிசித்து சிவகாமி அம்மைக்கு முத்தக் காப்பட்டி ஜமீன்தாரிணியின் பொருளுத வியால் திவ்விய ரதம் ஒன்று செய்து சமர்ப்பிவித்தார்கள்.

## திருமலை ஜோதி.

அங்கிருந்து மஹாஸந்நிதானம் திருவண்ணுமலை சென்று திருமலையை வலம் வருகையில் ஈசானதிசை அடைந்த தும் தம் அடியார்களை நோக்கிப் இப்பர்வ தத்தைநோக்குங்கால் இத்திருமலை ஜோதி மலையாய்க் காட்சியளித்தலும், "எல்லாம் வல்ல இறைவன் பிரம்மா விஷ்ணு களுக்கு ஜோதி ரூபமாய்க் காட்சியளித்த படி நாங்களும் தங்கள் கருணையால் இப் பரஞ்ஜோதி வடிவாகத் தரிசித்தோம்" எனப் போற்றி மகிழ்ந்தனர்.

## அனுபவ ரஸமஞ்சரி அருளுதல்.

அதன் மேல் அவ்விடம் விட்டுப் புறப் பட்டு, குடந்தை முதலிய சிவக்ஷேத்தி ரங்கள் பலவற்றையும் தரிசித்துத் திரு நெல்லையம்பதி வந்து சேர்ந்தார். எங்கு சென்றாலும் முக்கியமான சீடர்கள் கூடவே செல்வர். எங்கும் பிரசங்கங் களும் சூதஸம்ஹிதாப்படனமும் நடப்பது உண்டு. ஜனங்கள் அவரது அமுதவாச கத்தைக் கேட்டு, அச்சமயத்திலாவது மனமுருகி ஈசனை வழுத்தாதவர் இல்லை. தம்மை நெருங்கியண்டிப் பணிந்தவர்க்கு, “இவர்கள் பரமசிவனது அடியார்கள்” என்று யாவரும் பார்த்த மாத்திரத்தில் அறியும் வண்ணம் ஏக ருத்திராட்க்ஷம் கழுத்தில் இருவித்து நெற்றியில் திரு நீறும் வாயில் திருநாமமும் எப்பொழுதும் துலங்கும்படி செய்வித்தார். திருநெல் வேலி பஜனை மடத்தில் இருக்கும்போது எஞ்சினீராபீஸ் ரைட்டர் காந்திமதிநாத பிள்ளை மஹா ஸந்நிதானத்தைத் தரி சித்து ஒரு சீடரானர். அவ்வேளையில் தருவாடியார் சுவானுபூதிரஸாயனத்தைப் பற்றி மஹாஸந்நிதானத்திடம் பாடம்

கேட்பதைப்பார்த்துத் தானும் சிரவணம் பண்ணினர். அவரது வேண்டுகோளின் படி மஹாஸங்கிதானமும் ஸ்வானுபவ ரஸமஞ்சரி என்ற சாஸ்திரத்தை இயற்றி யருளினர்.

## பரமசிவனே அளித்த பஞ்சான்னம்.

பின்னர் மஹாஸங்கீதானம் இராமே சுவர யாத்திரை செய்ய உத்தேசித்து மறுபடியும் புதுக்கோட்டை வந்து தம்மை விட்டுப் பிரியாத சிடருடன் புறப்பட்டார். திருப்பத்தூர் வந்ததும், அங்கு இரவில் தங்கி, இராமசிவனை யழைத்து, "இராப் போஜனத்திற்கு ஏழு கட்டி அன்னம் கோவிலில் வாங்கி வாரும்" எனக் கட்டளையிட, அவரும் உடனே கோயில் பரிசாரகனைக் கண்டு பிரசாதம் கேட்க, அவர் "இச்சமயத்தில் சுத்தான்னம் தான் கிடைக்கும். அர்த்தஜாமமாகில் பஞ்சான்னமும் கிடைக்கும். உம் இஷ்டம் என்ன?" என்று கேட்டார். அதற்கு இராமசிவன், அர்த்த ஜாமத்தில் வந்து பஞ்சான்னமாக ஏழு கட்டிகள் வாங்கிக் கொள்வதாகக் கூறி மஹா

ஸந்நிதானத்தினிடம் வந்து நடந்ததைச் சொன்னார். எல்லாரும் மஹாஸந்நிதானத்தின் கதாப் பிரசங்கம் கேட்டுக் கொண்டிருந்ததால் பொழுது போனது தெரியாமல் இரவு ஒரு மணியாயிற்று. பிரசங்கம் முடிந்ததும் கோயிலை நோக்கிச் சென்றார் இராமசிவன். கதவு பூட்டப்பட்டு வெகு நேரமானதை மஹாஸந்நிதானத்தினிடத்தில் தெரிவிக்க, மஹாஸந்நிதானமும் "இன்றிரவு உபவாசத்தால் எவ்வளவோ பலனுண்டு" என்று கூற, யாவரும் சயனித்துக் கொண்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் கருணையங்கடலான ஈசன் அக்கோயில் பரிசாரகன்போல் ஸ்வாமிகள் படுத்திருந்த இடம் வந்து, "திருநெல்வேலியிலிருந்து வந்த பிராமணர் எங்கே?" என்று வினவ, ஸ்ரீ சுந்தரர் விழித்துக் கொண்டு "யாது செய்தி" என்று கேட்டார். வந்த பரிசாரகரும் 'அன்னம் கேட்டவர் வந்து வாங்கிக்கொள்ளலாகாதா? இருக்கும் இடம் தேடி வருமா?" என்று கூறினார். மஹாஸந்நிதானம் இராமசிவனை யழைத்து அவர் கூடச் சென்று வாங்கி வரும்படி கட்டளையிட்டார். சிவனும்

அப்படியே அவர் பின் செல்ல, பரிசாரகர் பூட்டியிருந்த கோபுர வாயிலின் கதவைத் தள்ள, அது உடனே திறந்து விட்டது. வந்தவர் இவர் கையைப்பற்றி மடைப் பள்ளிக்கு நேராகக் கூட்டிக் கொண்டு போய் "ஏழு கட்டிசாதம் வைத்திருந் தேன். ஒன்றை எலியோ, பூனையோ தின்றுவிட்டது. போக ஆறு சாதம் இருக் கின்றது. 'கொண்டுபோம்'' எனக் கொடுக்க, இராமசிவன் அவற்றைவாங்கிக் கொண்டு வெளியே வந்ததும் கதவு தானே மூடிக்கொண்டதையும் வந்த பரிசாரகர் காணாது மறைந்ததையும் கண்டு திகைத்து, ஆனந்த பரவசத்தோடு அவன் அருளைத் துதித்து நின்றார். "போனவர் வரவில்லையே" என்று மஹா ஸந்நிதானம் ஆவுடையப்ப பிள்ளையை அனுப்ப, இருவரும் வந்து நடந்த சங்கதி களை இராமசிவன் அறிவிக்கக்கேட்டு பரமசிவனின் கருணையைப் புகழ்ந்து பிர சாதத்தைத் தானும் உட்கொண்டு மற்ற சீடர்களுக்கும் அளித்து, ஒரு சாதத்தை பின்னர் சாப்பிட மறுநாள் உலர வைக் கும்படி ஆக்ஞாபித்தார். அன்று இரவு

நேரத்தைச் சிவராத்திரியாகக் கழித்துப் பொழுது புலர்ந்ததும் அவ்வாலயம் நண்ணி, சிவபிரானுக்கு அபிஷேகாதிகள் புரிவித்து, "கோடிக்கரை சென்ற பயன் இங்கேயே கிடைத்தது" எனக் கூறி, மீண்டும் புதுக்கோட்டை வந்து சின்னாள் தங்கியிருந்தினர்.

## சேதுயாத்திரை

அங்ஙனமிருக்கையில் ஒரு தினம் மஹாஸந்நிதானம் மீண்டும் இராமேசுவர யாத்திரை செய்யக் கருதினர். பக்தியையே பணியாய்ப் பூண்ட அரிமளம் சிவராமன் செட்டியார் முதலான அன்பர்கள் "யாத்திரைக்கு வேண்டுவன யாவும் சித்தமாயின" என விண்ணப்பிக்க, இரு வண்டிகளில் ஒரு நல்ல வண்டியில் மஹாஸந்நிதானமும், மற்றொருவண்டியில் சில சீடர்களும், ஏனையோர் கால் நடையாகவும் புறப்பட்டனர். திருமயம் தாண்டிச் சென்றதும் சிவபெருமானே மஹாஸந்நிதானம் உருக்கொண்டு போர்வை போர்த்துக்கொண்டு வண்டிக்கெதிரே நின்று, அதற்கு மேல் போகக்கூடாது

என்றும் புதுக்கோட்டைக்கே வண்டியைத் திருப்பவேண்டும் என்றும், வண்டிக்கார னிடம் சொல்ல, அவனும் அவ்வுத்திர வின்படி வண்டியைத்திருப்பிச் செலுத் தினான். வெகு தூரம் சென்ற பின் மஹா ஸந்நிதானம் தமது போர்வையைத் திறந்துகொண்டு "வண்டி எங்கே போகி றது?'' எனக் கேட்டதற்கு "புதுக் கோட்டை இன்னும் ஐந்து மைல்தானிருக் கிறது'' என்று நடந்தவற்றைச் சொல்லக் கேட்டு, ஆச்சரியப்பட்டு, "யான் வண்டியை விட்டுக் கீழ் இறங்க வில்லையே'' என்று சொல்ல, அனைவரும் கடவுளைத் துதித் தனர். இராமேசுவர யாத்திரை புதுக் கோட்டை யாத்திரையாக முடிந்தது. மறு நாட் காலையில் சில பிரயாணிகள் மூலம் எவ்விடத்தில் தங்கள் வண்டியைத் திருப் பினார்களோ அதற்கு ஒருமைலுக்குப்பால் புயலடித்து அநேக மரங்கள், வண்டிகள், ஆடு மாடுகள் வீடுகள் முதலியன மிகச் சேதமாயின என்று தெரியவந்ததும், மஹாஸந்நிதானம் "கடவுளின் கிருபைக் குக் கைம்மாறு உளதோ? அவர் கடன் அடியாரைத் தாங்குதல்'' எனவும் "தன்

கடன் பணிசெய்து கிடப்பதே" எனவும் கூறி அருளினர். மெய்யடியார் துன்புறு வதைப் பார்ப்பரா பரமன்? பாண்டியன் தன் பிரம்பால் திருவாதவூரனை அடித்த அடியைத் தன் முதுகில் தாங்கியருள வில்லையா? தியாகராஜரையும் ஸ்ரீ ராம லக்ஷமணர் காப்பற்ற விரும்பித் திருடர் களை விரட்டி அன்னாரை அவரது சீடராக்க வில்லையா? அங்ஙனமே தமது அவதார மாகிய மஹாஸந்நிதானத்தையும் காப் பாற்றினர் போலும்.

## அரிமள விஜயம்

பின்னர், சிவராமன் செட்டியார் மஹா ஸந்நிதானத்தைத் தமது ஊராகிய அரி மளத்திற்கு அழைத்துச் சென்றார். சீடர் களும் மஹாஸந்நிதானமும் விஜயம் செய்து அங்கு வசித்து வரும்பொழுது அவரது வாக்குச்சாதுர்யத்திற்கும் தவமகி மைக்கும் அந்நகரத்தார் ஈடுபட்டு, அவ்வூர் மீனாக்ஷிசுந்தரரேசுவரர் கோயிலைப் பரிஷ் காரம் செய்து அவ்வாலயத்திற்கு அஷ்ட பந்தனக்கும்பாபிஷேகமும் நடத்தி வைத் தார்கள். அரிமளத்தில் ஆலயப் பலிகள்

நடைபெறும்பொழுது வந்த அன்பர்களுக்குத் திருவமுது செய்யத்தக்க பொது இடமொன்று இல்லாதிருந்தது. அங்கு இருந்த ஒரு பழைய சத்திரமும் சாத்தப்பட்டிருந்ததை அறிந்து, மஹாஸந்நிதானம் அக்குறையை நீக்கி, வருவோர்க்கு விருந்தளிக்கும் அன்ன சத்திரம் திறக்குமாறு அன்புமிக்க செல்வர்க்கு அறிவிக்க, அவர்கள் அதற்கு மனமொப்பாதிருந்தனர். தன் ஆத்மசக்தியை வெளிப்படுத்த இதுவே தருணமெனக் கண்டு அந்தணர் முதலியோர்க்கு அன்னமளிக்கும் அந்தச் சத்திரத்தை ஸ்தாபித்தாலன்றி உணவொன்றும் உட்கொள்ளேன் என்று மஹாஸந்நிதானம் வீர சபதம் செய்தனர். பிறர் பசிதீர்க்க விரும்பியதால் பல நாள் பட்டினியிருந்தனர். பெரியார் பசித்து இருப்பதையும், பிறர் பசி தீர்க்கத்தான் கொண்ட தமது தவத் திருமேனியையும் பார்த்த பக்த சிகாமணிகள் தமது மன வருத்தத்தைச் சிறிதும் கவனியாது தனவைசியர்கள் தயை நிறைந்தோர் என்பதைக் காரியத்திலும் காட்டினராம். அன்று தொடங்கிய

அன்ன சத்திரம் இன்றும் சாதுக்களை ஆதரித்து வருகின்றது. கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்திவைக்க வந்தவர்களில் ஒருவரான கோயிலூர் சிதம்பரய்யா மஹாஸந்நிதானத்தைத் தரிசித்து வேதாந்த தத்துவங்களைப் பற்றிசல்லாபித்து மஹாஸந்நிதானத்தின் மீது பேரன்பு படைத்தவராயினர். கோயிலூர் சிதம்பரய்யா அவர்கள் பிறகு மஹாஸந்நிதானத்தை கோயிலூருக்கு விஜயம் செய்யும்படி வேண்டிக் கொண்டனர். மஹாஸந்நிதானமும் அதற்கு இணங்கி அங்கு சென்ற பொழுது சிதம்பரய்யா அவர்கள் ஸ்வாமிகளை பெரிதும் உபசரித்து நகரங்களுக்கு அழைத்துச் சென்று, நகரத்தார்களுடைய பல ஊர்களிலும் சூதஸம்ஹிதாப்படனம் நடத்திச் சந்தோஷம் அடைந்தார்கள். ஒருநாளேனும் மஹாஸந்நிதானத்தின் சூதஸம்ஹிதாப்பிரசங்கம் கேட்டோர் சிவபக்தர் ஆவர் என்பதற்கு ஐயமில்லை. இன்றும் தலைவைசிரியர் ஒவ்வொருவர் கழுத்திலும் விளங்குகின்ற ருத்திராட்சப் பொன் மணியும் நெற்றியில் துலங்குகின்ற மூப்

பட்டை விபூதியும் மஹாஸந்நிதானம் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளின் சிறந்த சிவபக்திப் பிரசங்கத்தின் பேரொலியே என்று கூறினும் மிகையாகாது,

## சிவச் சின்னம்

விபூதி :—விபூதி ருத்திராட்டசங்களின் மகிமையைத் தான் என்னென்று சொல்வது. விபூதி எனின் பெருமை, செல்வம், எனப் பொருள்படும். எப்படி செல்வம் எக்காரியத்தையும் விரும்பியபடி செய்ய வல்லதோ, அவ்வண்ணமே திருவாலவாயன் அணிந்த திருநீரும் சிறுசெல்வம் முதல் சிவானுபவச் செல்வம் முடிய அனைத்தும் தரவல்லது. சமண மதத்தில் ஈடுபட்டிருந்த பாண்டியனது ஜுரத்தைப் போக்கி சிவமதத்தின் பெருமையை விளக்கியது விபூதியன்றோ ?

விபூதியைப்பற்றிக் கூறும் பொழுது, ஜீவனது மலம் அஞ்ஞானம் கோமயம் என்பது பசுவின் மலம். பசுவென்ற மொழி ஜீவனுக்கும் உரிய பெயர். ஆதலின் கோமயத்தைச் சுட்டுப் பொடி

செய்து தூய வெண்ணீறு தரித்திடவே, எவனும் ஞானைசுவரியனைப் பிரகாசிப்பான்" என்கிறார்.

ருத்திராட்க்ஷம் :—ருத்திராக்ஷத்தின் மகிமையும் பின் வாங்கியதல்ல. ருத்திராக்ஷம் துன்பம் நீக்கும் இன்பமணி. சிவன் அணியும் நல் அணி. நம் கழுத்திற்கும் அது ஓர் ஒப்பற்ற அணியாகும். ஸ்பரிச மாத்திரத்தால் நம் உடலையும் புனிதமாக்கும் தன்மையது. இலங்கேசனை இராவணனும் விபூதி, ருத்திராக்ஷமணிந்து சிவபூஜைபண்ணித் தான் போஜனம் கொள்வனெனக் காணவில்லையா?

அரசனைக் காணாத விடத்து அவனது முகர் அவரதிகாரத்தை வெளிப்படுத்துவதே போல், வெகு சிரத்தையுடன் தரிக்கும் விவேகிகளுக்கு ருத்திராக்ஷம் தனது நாம வைபவத்தாலேயே பரம சிவனது ஞாபகத்தையே உண்டு பண்ணி உய்விக்கும் என்றும் அதற்கு உதாரணமாக, திருமங்கல்யம் என்னும் ஓர் ஒப்பற்ற ஆபரணமே ஓர் பெண்ணின் மாங்கல்யத்தைக் குறிக்கிறது போல்

ருத்திராட்சதாரணமில்லாதவர் சிவப்பிர ஸாதத்திலிருந்து தள்ளப்படுவார் என்றும் ருத்திராட்சம் இல்லாத சிவபக்தி கண்ணில்லாத மன்னன் போல் என்றும் கூறுகிறார். ஆகவே இவைகளின் பெருமை சொல்லி முடியாது. நிற்க

### பஞ்சாட்க்ஷரம்

பஞ்சாட்க்ஷரம் என்பது, "வேதநான் கினும் மெய்ப்பொருளாவது நாதனும நமச்சிவாயவே." இம்மந்திரத்தின் பொருள் ஜீவனது வணக்கம். சரீரத்திற் குரிய வணக்கம் யஜமானனுக்குத் தாச னது தொண்டு போல்வது. ஜீவன் செய்யும் வணக்கமோ பரமசிவன் ஓர் கடல் போலவும் தான் அதின் ஒரு திவிலை போலவும் பாவித்துத்தியானித்தல்.

இவைகளின் மகிமையைப் பற்றி விவரமாக மஹாஸந்நிதானத்தால், ஸ்வானுபவ ரஸமஞ்சரியில் கூறப் பட்டுள்ளதையாவரும் படிக்கத்தகும்.

### இரண்டாம் லட்ச தீபம்.

அப்பால் நாராயண சிவனும் ரங்கநாத சிவனும் கி. பி. 1870-ம் வருஷம்

இரண்டாவது லக்ஷதீபம் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளுடன் மஹாஸந்நிதானமும் திருநெல்வேலி சோழனூட்டிலுள்ள பாலகிருஷ்ண கனபாடிகள் முத்து கனபாடிகள் முதலானோரை வரவழைத்து லக்ஷதீப விழாவைக் கொல்லம் 1045-ம் ஆண்டு தைமாதம் அமாவாசையன்று திருநெல்வேலியில் சிறப்பாக நடத்தினார்கள். மஹாருத்திராபிஷேகம், இலக்ஷதீப தரிசனம், ரிஷபவாகனக் காட்சி முதலியன செய்வித்து ஆனந்தித்தனர்.

## ஆறுவது அத்தியாயம்.

## சுவாமிகள் மதுரை விஜயமும் மாட்சியும்

நிற்க, திருநெல்வேலி நகரை விட்டுப் புறப்பட்டவர் தம் மாணவர்கள் புடைசூழ்ந்துவர, ஹாலாஸ்ய க்ஷேத்திரமென்னும் மதுரைநகர்க் கண்விளங்கும் விபூதி மடத்தில் எழுந்தருளினர். சிந்நாள் சென்றவளவில், ஒரு நாள் சிஷ்ய கோஷ்டியில் ஒருவரான நாராயணசிவன் நீர்மேல்யோகநிஷ்டை செய்வான் விழைந்து, சங்கப் பலகைக்குச் சிறப்புதந்த பொற்றாமரைத் தண்ணீரில் உட்கார்ந்து நிஷ்டை



ஸ்ரீ நாராயண சிவன்

செய்யலாயினர். அக்கால் அவரது சரீரம் திடீரென நீர்க்குள்ளாகியது. அவ்வாலய பூஜை செய்யும் சுப்பிரமணிய குருக்கள் அவ்விபத்தைக் கண்டு, மனம் விண்டு கோயில் அதிகாரிகளிடம் அவ்வுடலத்தைத் தண்ணீரிலிருந்து எடுத்து வெளிப்படுத்துமாறு முறையிட்டார். முறைப்பாட்டிற்குச் செவிசாய்த்த அதிகாரி உடனே அவ்வுடலத்தைத் தேடி எடுக்கும் ஏற்பாடு செய்தனர். வெகுநேரம் தேடியும் அவ்வுடலம் அகப்படவில்லை. மூன்றாம் நாள் தானாகவே அவ்வுடல் நீர்மேல் மிதக்க, அவ்வாலய பூஜை புரியும் சுந்திர சாஸ்திரிகள் அதனைக்கண்டு, 'சுப்பிரமணிய குருக்களே! தாங்கள் முன்னம் தெரிவித்து ஆயும் வண்ணம் செய்த உடலம் இன்று நீர்மேல் கிளம்பி மிதக்கின்றதே. அத்தேகம் ஆண்டு இருக்கும் வரையில் கோவில் பணி நடைபெறுவதெங்ஙனம்? என, அதுகேட்ட சுப்பிரமணிய குருக்கள் ஓடோடிச் சென்று கோவில் அதிகாரியினிடம் அறிவித்தனர். அக்கணத்தே அவர் போலீஸ் அதிகாரிகளுக்கு விஷயத்தை அறிவிக்க, போலீஸ்

அதிகாரிகள் பொற்றாமரைக் கரையில் அணுகிய வளவில், மஹாஸந்நிதானம் ஆண்டு வந்து நடந்தவைஎன்? என, போலீஸ் அதிகாரிகள் தங்கள் அறிந்த வற்றை மஹாஸந்நிதானத்திற்கு இயம்பி பிறகு அவ்வுடலை வெளியாக்கும் பணியில் விரைந்தனர்.

அது கேட்ட மஹாசந்நிதானம் அமைதி யோடு, நீவிர் கொஞ்சம் தயவுசெய்து அவ்வுடலத்தை விபூதி பிள்ளையாரின் ஸந்நிதிமுன்னர் கொண்டு சேர்ப்பீர் அவ்வுடலத்தில் ஜீவன் இருக்கின்றதோ எனக்காண்போம். அவ்வார்த்தையைக் கேட்ட கோயிலதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் வியப்புற்று, ' இதென்ன பயித்தியம், மூன்று தினங்கள் கழிந்த பின்னரும் உடலில் உயிர் நிலவியி ருக்குமா? எக்காரணத்தைக் கொண்டும் நம்புவதற்கு இடமில்லை. இது, கனவிற் கண்ட செல்வம் செலவுக்கு உதவுவது போலத்தான் என அவர்கள் பரிகஸித் தனர்.

ஆங்குக் கூடியிருந்த மக்களுள் சிலர் என்னே நீங்கள் பேசுவது? 'அதனால் நீங்கள் அடையும் பொருட்சேதம்தான் என்னே? சரீரத்தில் ஜீவன் வந்தால் நலம் தானே. அவ்விஷயத்தில் நீவிர் தடுப்ப தென்னவோ வெனச்சொல்ல, அச்சொற் களைச் செவியேற்ற அதிகாரிகள் மன மிசைந்து, அச்சடலத்தை விபூதி விநாய கர் திருக்கோவிலின் முன்னே கொண்டு கிடத்தினர்.

அங்கே கூடியிருந்தவர்கள் அத்யாச்சரி யம் அடையும் வண்ணம், மஹா ஸந்நிதானம் அங்கு வந்து அச்சடலத்தின் மேல்விபூதி தாரணஞ் செய்து, வலக்காதில் ஒரு மொழி ஊத, நாராயணசிவன் கனக் கண்டு கண் விழித்துப் பார்ப்பதைப்போற் கண் விழித்து எழுந்து, ஆண்டுள்ளாரைவு கண்டு கரையற்ற ஆனந்தமடைந்து மஹாஸந்நிதானத்தின் மலரடி பணிந்து, "சுவாமின் அடியேனைச் சிவப் ரஸாதத்திற்கு அடிமையர்க்கி, ஸஹிதஸம் ஹிதாபடனம் பஞ்சாக முறையில் இங்ங னே நடத்தியருளல் வேண்டும்" எனப்

பிரார்த்தித்தவுடனே, மஹாஸந்நிதானமும் மனங்கனிந்து அவ்வாறே ஸ்ரீ சூர்ய நாராயண சிவனை மூலம் படிக்கச் செய்து, தாம் அவற்றின் பொருளை முறையே ஐயமின்றி வியாக்யானஞ் செய்துவர, அனைவரும் அகமிகமகிழ்ந்து போற்றலாயினர்.

அன்றிரவில், சேஷாசல தீக்ஷிதர் நடத்திய ஸத்கதாப்ரஸங்கத்தையும், அதன் சார்பாக நடத்தப்பட்ட பஜனைகளையும், சந்தர்ப்பனைகளையும் மஹாஸந்நிதானமே கூடயிருந்து நடத்திவைக்கக்கண்ட அவ்வூர் மக்கள் யாவரும் பக்தியின் மேலீட்டால் மஹாஸந்நிதானத்தின் மலர் பணிந்து சிவப்பேற்றிற்கு அருகராயினர். என்னே மஹாஸந்நிதானத்தின் மாண்பின் திறம் இருந்தபடி

அதன் பின்னர், மஹாஸந்நிதானம் திரிசிரபுரம், ஜம்புகேசுவரம் முதலிய ஸ்தலயாத்திரை செய்து திருவையாறும், அதனைச் சேர்ந்த ஸப்தஸ்தானங்களும் தரிசித்து வருகையில் ஆங்குள்ள பிராமணோத்தமர்கள் அத்தலத்தையும் அதனைச் சார்ந்த ஸப்தஸ்தானங்களையும்

செப்பனிட்டு அஷ்டபந்தனம் செய்தருள வேண்டும் எனப் பிரார்த்தித்தனர். மஹாஸந்நிதானமும் அதற்கு இசைந்து, சிவராமன் செட்டியார், சத்திரம் சின்னையாசெட்டியார், முதலியவர்களுடன் அதற்கு வேண்டிய விஷயங்களைக் குறித்து சம்பாஷித்தனர்.

## அன்னமிட ஆற்றப்பரது தூது.

பிறகு, கபிஸ்தலம் முதலிய பல ஊர்களிலும் சென்று யாசித்து வரும்போது உமையாள்புரம் கிராமத்தை நெருங்கும் சமயம் சிவபெருமான் மஹாஸந்நிதானத்தின் சிஷ்யரில் ஒருவரான நாராயண சிவன் போல் வேடம் பூண்டு அவ்வூரில் வசிக்கும் அம்பாம்பாள் என்ற ஓர் பிராம்மணப் பெண்மணியிடம் சென்று, “அம்மே! நாளைப் பகலில் பத்து மணிக்கு ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் இங்கு வருகிறார் ஆதலின் அதற்குள் சமையல் செய்து பிள்ளையார் கோவிலுக்குக் கொணர்ந்து சேர்ப்பிக்கவேண்டும்.” என்று கூறி வெளியே செல்பவர் போல் மறைந்தார். அவ்வம்மணியும் அன்புடன் அப்படியே

செய்து அங்கு வந்து காத்திருந்தாள். மஹாஸந்நிதானமும் தனியே அங்கு வந்து திருவமுது கொள்ளும் மத்தியில், 'தேவரீர் வரவை எனக்கறிவித்த நாராயணசிவன் எங்கே?'' என்று அவ்வம்மையார் வினவ, மஹாஸந்நிதானம் ஆச்சரியமுற்று "எல்லாம் திருவையாற்றப்பரது திருவிளையாடல். நாராயணசிவன் நாமக்கல்லுக்கு சமீபமுள்ள முத்தக்காப்பட்டியிலன்றோ இருக்கிறார். ஐயனுடைய பொய் வேடம் அது, எனக்கு அமுதளிக்கும் போதெல்லாம் இங்ஙனம் பொய் வேடமே பூணுகிறது வழக்கமாயிருக்கிறது,'' என்று கூறி ஆனந்தக் கண்ணீர் உகுத்தனர். அதைக்கேட்ட அம்மாள் பரவசமாகிப் பலதரம் நமஸ்கரித்து மஹாஸந்நிதானம் திருவமுது செய்ததுபோக மிகுதியைத் தன் வீட்டிற்குக் கொண்டு போய்ப் பிரசாதமாகப் புசித்து ஆனந்தத்திருந்தனள்.

## சென்னை விஜயம்.

பின்னர் மஹாஸந்நிதானம் தமது சிஷ்யருடன் சென்னை நகர் வந்து கூர்ஜர பிராமணர்கள் உதவியால் புஷ்பகிரி

மடத்தில் தங்கினர். அச்சமயம் தன்னை முன்னமே தஞ்சையில் தரிசித்த சென்னை ஏகாம்பரேஸ்வர அக்கிரஹாரம் 27-ம் நம்பர் வீட்டில் தங்கியிருந்த ஜீவாய் பாய் அம்மாளும் அவரது பர்த்தா சுப்பராய டாக்கரும், மஹாஸந்நிதானத்தைத் தரிசித்து ஓர் உபதேச மொழியும் பெற்றுக் கொண்டனர். அவர்களின் வேண்டுகோளின்படி அம்மடத்திலேயே சூதஸம்ஹிதாப் பிரசங்கம் பஞ்சாஹ முறையாய்ச் செய்யப்பட்டது.

பஸ்மருத்திராட்ச மகிமையைக் கேட்ட இத்தம்பதிகள் அன்று முதல் சீடராய் ஏற்பட்டு திருவையார் கும்பாபிஷேகத்திற்குப் போதுமான திரவியம் திரட்டி அளித்தனர். அம்பா சங்கர் தவை, ராஜாராம் தருவாடி, ராஜூபாய் அம்மாள் டகட் இவர்கள் மூவரும் அப்போது மஹாஸந்நிதானத்தின் பரமசிஷ்யரானர்கள்.

சென்னையில் சூதஸம்ஹிதாப்பிரசங்கம் இரண்டாம் நாள் நடத்தும் பொழுது, சிலர் மஹாஸந்நிதானத்தின் மகிமையைப் பற்றிச் சந்தேகித்துப் பேசுவதை

அறிந்து மஹாஸந்நிதானம் வாக்கியார்த்தம் சொல்லிக்கொண்டே பீடத்துடன் வெகுநேரம் அந்தரத்தில் ஓர் ஆதாரமுமின்றிப் படனம் செய்தார். இதைக்கண்டதும் அவ்வீணர்கள் மனம் தெளிந்து தம் குற்றம் நீங்கப் பெற்றனர். கிருஷ்ணஞ்சிதவை ரத்தினங்களாலிழைக்கப்பட்ட கௌரீசங்கர்மாலை ஒன்று செய்வித்து 1905-ம் வருஷத்தில் மஹாஸந்நிதானத்தின் கோவிலில் சமர்ப்பித்தனர். அது இன்றைக்கும் மஹாஸந்நிதானத்தின் சமாதியான அரிமளம்கோவிலில் இருக்கிறது. இதை யாவரும் தரிசிக்கலாம். மேலும் கூர்ஜர ப்ராமண பெண்மணியும் தர்ம சிந்தனையும், தாராள மனதுமுடையவளாகிய ராஜூபாய் அம்மாள் டகட், தன் சொந்தச் செலவிலேயே மற்றுமோர் சூதஸம்ஹிதாப்படனம் பஞ்சாஹ முறையில் நடத்தும்படி கேட்டுக்கொண்டு மஹாஸந்நிதானத்திற்கு சஹஸ்ரார்ச்சனை (1008 ரூபாய்) சமர்ப்பித்தாள். அவ்வாறே சூதஸம்ஹிதாப்படனம் நடைபெற்றது. மேலே சொல்லப்பட்டிருக்கிற ஜீவாய்பாய் அம்மாளின் பேரப்பிள்ளை

யாகிய டி. சிவசங்கர் டாக்கர் அவர்களும் மற்றுமுள்ள டாக்கர் வம்சஸ்தர்களும் மேற்படி ஜீவாய்பாயம்மாளின் பெண் சந்ததியைச் சேர்ந்த மேத்தா குடும்பஸ்தர்களும், மேற்படி ஜீவாய்பாயம்மாளின் சகோதர வம்சத்தாரும், மஹாசந்நிதானத்தின் திருவுருப்படத்தை இன்றும் பூஜித்து வருகிறார்கள்.

சென்னை நகரில் தற்காலம் கூர்ஜரப் பிராமணர்கள் தரித்து விளங்கும் பஸ்ம ருத்திராக்ஷமும், நடத்திவரும் சிவபூஜையும் மஹாஸந்நிதானத்தின் பூர்ண ஆசீர்வாதம் தான்.

## சப்தஸ்தானக் கும்பாபிஷேகம்.

பிறகு சென்னையிலிருந்து மஹாஸந்நிதானம் காசிக்குப் புறப்பட்டனர். பற்பல இடங்களிலும் பணம் திரட்டியபின் திருவையாறு வந்து சேர்ந்து திருவையாற்றுக் கும்பாபிஷேகத்தைக் குப்பாணிசிவனும், திருச்சோற்றுத்துறை திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருநெய்த்தானம், திருப்பெரும்புலியூர், திருமழபாடி, திருத்திங்களூர், திருக்கடுவெளி முதலிய ஸ்தலங்

களில் அஷ்டபந்தன மஹா அபிஷேகத்தைப் பிறசீடர்களாலும் நடத்தக்கட்டளையிட்டனர். திருக்கண்டியூர், திருவையாறு நீங்கலாக மற்ற ஸ்தலங்களில் 1872-ம் வருஷம் கொல்லம் 1047-ம் ஆண்டு ஆங்கிரஸ வருஷம் வைகாசி மாதத்திலும், அவ்வருஷம் ஆனிமீ 3-ம் தேதி, திருக்கண்டியூரிலும் 9-ம் தேதி திருவையாறிலும், அஷ்டபந்தன கும்பாபிஷேகம் வேதமுறைப்படியே நடத்தி, லக்ஷ பிராமண போஜனமும், விருஷபவாஹன காக்ஷியும் மிகச்சிறப்பாய் நடைபெற்றன. வித்வாம்சர்கள், கனபாடிகள், தீக்ஷதர்கள் சாஸ்திரிகள், கோயிலூர் சிதம்பரைய்யா அவர்கள், மாணாக்கர்கள், மற்ற நகரத்தார்கள், பிரபுக்கள் முதலிய எல்லோரும் வந்து ஐந்து நாட்களிலும் காக்ஷியைக்கண்டு ஆனந்தமடைந்தனர். அச்சமயத்தில் மஹா வைத்தியநாத பாகவதரும், அவர் தமையனர் இராமசாமி பாகவதரும் வந்து மஹாஸந்நிதானத்தைத் தரிசித்துப் பாடித் தங்களையும் ஆட்கொள்ளும்படி பிரார்த்திக்கவே மஹாஸந்நிதானம் அப்படியே அனுக்

கிரஹித்து, சீடராக்கி உபதேசமொழி பகர்ந்தனர். அவ்விருவர்களும் திருவடிக்காளாய் இடைவிடாது அன்புவாய்ந்தவர்களானார்கள். அதன்பின் கோயிலூர் ஐயா அவர்களையும் மற்றுமுள்ள நகரத்தார்களையும் பிரபுக்கள் முதலியோர்களையும் உபசரித்தனுப்பினர்.

## ஏழாவது அத்தியாயம்,

## கங்கை கொண்டான் கும்பாபிஷேகம்.

பின்னர், மஹாஸந்நிதானம் தம் அரிய மாணாக்கருடன் திருநெல்வேலி வந்து சேர்ந்து பஜனை மடத்தில் தங்கியிருக்கும் காலத்தில், அவரது ஜனன பூமியாகிய காமதேனு பூஜித்த ஸ்தலமென்றும் திந்திரிணி வனமென்றும் வழங்குகின்ற கங்கை கொண்டான் ஊரிலும் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடத்திவைக்க வேண்டுமென்று அக் கிராமத்தார்கள் வேண்டினர். மஹாஸந்நிதானமும் அதற்கிசைந்து சிவராமன் செட்டியாரின் வேண்டுகோளின்படி கொழும்பு முதலான தேசங்களுக்குச் சென்று வேண்டிய தனம் சேகரித்துத் திரும்பினர்.

## பஜனை ரராணுவம்.

வரும் வழியில் வல்லநாட்டுப் பொத்தைக்குச் சமீபத்தில் திருடர்கள் வந்து பொருளை அபகரிக்க நெருங்கினர். அப்பொழுது பஜனை செய்துகொண்டு சென்ற மஹாஸந்நிதானத்தின் திருக்கூட்டம் அத்திருடர்களுக்குப் பல ஆயுதங்கள் தரித்த பெரிய ராணுவ வீரர்போல் தோன்றவே திருடர்கள் வெருண்டு ஓடி ஒளித்தனர்.

பிறகு மஹாஸந்நிதானம் தன் சீடர்களுடன் கங்கைகொண்டான் வந்து சேர்ந்து, ஆனந்தவல்லி சமேதராயுள்ள ஸ்ரீ கைலாசநாதர் கோவிலுக்குச் செய்ய வேண்டிய திருப்பணிகள் இயற்றச்செய்து குப்பாணி சிவனைக்கொண்டு 1873-ம் வருஷத்தில், அதாவது கொல்லம் 1048-ம் ஆண்டு ஸ்ரீமுக வருஷம் வைகாசி மாதம் 19-ம் தேதியில் கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார். ஸ்ரீ மஹாவைத்தியநாத சிவனும், அவரது சகோதரர் இராமசுவாமி சிவன் முதலானோரும் வந்து விசேஷத்தைச் சிறப்பித்தனர். சமாராதனையும் ரிஷபவாகனக் காட்சியும் கண்டோர்க்கு

ஆனந்தமளித்தன. இதுதான் ஸ்ரீசுந்தர மஹாசந்நிதானம் செய்வித்த கும்பாபிஷேகங்களில் கடைசியானது. மொத்தம் இருபத்திரண்டு கும்பாபிஷேகங்கள் நடத்திவைத்ததாகச் சொல்லப்படுகிறது.

## பிரம்ம கீதைக்குத் தமிழ் மொழிபெயர்த்தல்.

மஹாஸந்நிதானம் திருநெல்வேலி வந்து சேர்ந்து, பஜனை மடத்திலிருக்கும்போது மாணாக்கர்கள் வந்து ஸ்வாமி, யாவர்க்கும் பயனளிக்குமாறு பிரம கீதையைத் தமிழில்மொழி பெயர்தருளல் வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டனர். மஹாஸந்நிதானமும் அதற்கிணங்கி சொக்கலிங்கம் பிள்ளையை எழுதச்செய்து மூன்று அத்தியாயங்கள் முடிக்கும் சமயம் கல்லத்தி முடுக்குத்தெரு ஐயாசாமிபிள்ளை தரிசனத்திற்கு வர, அவரிடம் இதனைக் காண்பித்தனர். அவர் சந்தோஷித்துத் தம்மிடம் முன்னரே தத்துவராய ஸ்வாமிகள் மொழிபெயர்த்த பிரம்மகீதை யொன்று ஏட்டிலிருப்பதாகக் கொணர்ந்து இரண்டையும் ஒத்துப்பார்த்ததில் இருவர் உரையும்,மொழிபெயர்ப்பும்

ஒருரையாக இருப்பதை அறிந்து, அத் தமிழ்ப் பிரபந்தத்திற்கு மஹாஸந்நிதானத்தின் உரை விசேஷவுரையாகலாம் என்று கூறினர். அப்படியே மஹாஸந்நிதானமும் உரை இயற்றினார்கள். அவ்வுரை சென்னப்பட்டணத்தில் அச்சிடப்பட்டது.

## சுந்தரம் பிள்ளை சந்திப்பு

இப்படியிருக்கையில் ஒருநாள் மஹாஸந்நிதானமும் இஞ்சினீர் ஆபீஸ் ரைட்டர் காந்திமதிநாத பிள்ளை அவர்களும் மற்ற மாணாக்கர்களும் பஜனைமடத்தில் இருக்கும் போது திருஅனந்தபுரம் கலாசாலையில் தர்க்கசாஸ்திர பண்டிதரும் திருநெல்வேலி இந்து காலேஜ் தலைமை உபாத்தியாயருமான எம். ஏ. சுந்தரம் பிள்ளை என்பவர் மஹாஸந்நிதானத்தினிடம் வந்து சீடராகி வேதாந்த தத்துவங்களை அவர்களிடம் நன்கு கற்றார். நியாயம் வியாகரணம், பூர்வ மீமாம்ஸை, ஸாங்க்யம் முதலிய பலசாஸ்திரங்களின் முடிபையும் ஒன்றுபட விளக்கிய மஹாஸந்நிதானத்தின் பொன்மொழி கேட்ட பிள்ளை அவர்கள்

அதனை ஒரு புத்தகமாகத் தரும்படி வேண்ட, மஹாஸந்நிதானமும் அவர் கேட்டுக்கொண்டபடி அருளிச் செய்தனர்.

### தீர்க்க தரிசனம்.

பின்பு, குலசேகரப்பட்டணத்தில் கடைசியாக சூதஸம்ஹிதாப்படனம் நடத்துகையில் இரண்டாம் நாளில், தமது தமையனார் குப்பாணிசிவின் பத்தமடையில் பரகதியடைந்ததை ஞானதிருஷ்டியால் அறிந்து மாவடி சிதப்பரம் பிள்ளையிடம் இரகசியமாய் அறிவித்து, இரத்த சம்மந்த நிமித்தத்தால் சிறிது நேரம் மௌனமாய் இருந்தனர். யாவரும் ஆச்சரியப்பட்டு வருந்தினர். நாலாம்நாள் படனம் முடித்து இரவில் சிவபஜனத்துடன் கதாப்பிரசங்கமும் நடத்தி முடித்த பின் சமுத்திரக்கரையோரம் சென்று மாணாக்கர் யாவரும் நிலவில் தம்மைச் சூழ்ந்திருக்க மஹாஸந்நிதானம் அகாரணமாய் ஒரு பெரிய சப்தம் கொடுத்ததைக்கேட்டு சீடர்கள் பயந்து, "ஸ்வாமி! இஃது என்ன?" என்று வினவினர். மஹாஸந்நிதானம் வெகு சாவதானமாக, இந்நேரத்தில் பத்தமடைக்கோவிலில் கொள்ளை

செய்வதற்குத் திருடர் வந்திருந்தார்கள். ஊராரை எழுப்பினேன். என்று கூறக் கேட்டு ஆச்சரியமுற்றுப் பின் அவரவர் இடம் போய்ச் சேர்ந்தனர். மறுநாட் காலையில் ஐந்தாம் நாட்படனமும் நடத்தி சமாப்தி செய்யப்பட்டது. அடுத்ததினம் மேலே குறிப்பிட்ட இவ்விரண்டு விஷயங்களையும் குறித்து இருகடிதங்கள் வந்தன. அவற்றில் ஒன்றில் குப்பாணிசிவன் நிர்யாண தினைசைப்பற்றியும், மற்றொன்றில் பத்தமடைக் கோவிலில் திருடர்கள் திருடவந்ததாகவும் அகாரணமாய் ஒரு பெரும் சப்தம் கேட்டதால் ஊரார் எழுந்து அவர்களை விரட்டி விட்டதாகவும் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு அனைவரும் அத்யாச்சரிய முற்றார்கள். மஹாஸந்நிதானம் கடற்கரையில் போட்ட சப்தம் பத்தமடைவந்து ஊராரை எழுப்பியது, எல்லாம் வல்ல இறைவனது அருளேயல்லாமல் வேறில்லை.

## நிஜானந்தவிலாசம் இயற்றல்.

அப்பால் மஹாஸந்நிதானம் திருச்செந்தூர் சென்று குமரனைத் தரிசித்து

திருநெல்வேலிக்கு வந்து, பத்திரதீபம் நடத்தியபின் பல தேசங்கள் சென்று அரிமளம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு தங்கியிருக்கும் பொழுது, மஹாஸந்நிதானம் மகாவாக்கியச் சுருக்கம், வேதாகம், சம்பிரதாயப்பிரகரணம், மனோநாச மார்க்கம், முதலிய நூல்களை இயற்றி, முன் இயற்றியருளிய பிரசுரங்களையும் ஒன்று சேர்த்து, நிஜானந்த விலாசம் எனப் பெயரிட்டு வழங்குக என ஆக்ஞாபித்து பஜனைச் சிதம்பரம் பிள்ளை கையிற் கொடுத்தனர்.

## அரிமளம் வந்து அருளுடன் கலத்தல்

இவ்வாறு மஹாஸந்நிதானம் பல தலங்களும் சென்று, கடைசியில் அரிமளம் வந்து சேர்ந்தார்கள். அங்கு சில காலம் தங்கியிருந்து பகுதான்ய வருஷம் (கி. பி. 1878) அதாவது கொல்லம் 1054-ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆறும் தேதி திங்கட் கிழமை கிருஷ்ணபக்ஷம் தசமியன்று தமது கருணைக்குறிய மெய்யன்பர்கள் பலர் சூழ்ந்திருக்க, அவர்களை அனுக்கிரஹித்து விட்டுத் தாம் வைத்திருந்த நர்மதா பாண லிங்கத்தைத் தமது அடியார்களிடம்

கொடுத்து, " இது எங்கே பதிப்பிக்கப்படு கிறதோ அவ்விடத்தில் பரமசிவம் சாந்நித்தியம் செய்தருளும். அங்கு தவமியற்று பவர்க்கு விரைவில் இஷ்ட பலன் கிட்டும்'' என்றும் திருவாய் மலர்ந்தருளிப் பிரம்ம ஸ்வருபத்தில் கலந்து கொண்டனர். வாதவூரடிகளைப் போன்ற சிவராமன் செட்டியாரும் மஹாஸந்நிதானத்தின் கட்டளைப்படியே அவர் சமாதி வீற்றிருக்கும் ஸ்தானத்தில் ஓராலயம் நிரூபித்து அதில் அப்பாண லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் வெகுவிமரிசையுடன் நடத்தி வைதிக முறைப்படி நித்திய நைமித்திய ஆராதனைகள் நடந்தேறும்படி திட்டம் செய்தார். இன்றும் அவ்விடத்தில் வெகு சிறப்பாக பூஜை முதலானதுகள் அந்தணர் மூலம் நடைபெற்று வருகின்றன. அந்த லிங்கத்தைச் சிரத்தையுடன் பணிந்து தவம் செய்வோர்க்கு இகபர சாதனங்கள் யாவும் கிட்டும்படிப் பரமானந்தம் அளித்துப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார் ஸ்ரீ சுந்தர மஹாஸந்நிதானம்.

## எட்டாவது அத்தியாயம்

## ஸ்வானுபவப் பிரமாணம்

இவ்வாறு மஹா ஸந்நிதானம் சேது முதல் ஹிமாசல பர்வதம் வரை விரிந்துள்ள இப்புண்ணிய பூமி முழுவதையும் லோகோபகாரார்த்தமாய் சஞ்சரித்து ஆங்காங்குள்ள பக்தர்களுக்குப் பரம அத்வைதத்தின் உண்மையை அருளிச்செய்து அதற்கு சாதனமான பஸ்ம ருத்திராட்சதாரணம், சிவலிங்கார்ச்சனம், குருலிங்கசங்கமம், சாஸ்திரங்களில் உத்தமமான பக்தி இவைகளை நிலை நிறுத்தி, உலகை எல்லாம் உய்வித்தனர். நிற்விகற்பசமாதியில் அகண்டாகாரசான சச்சிதானந்த ஜோதி மாத்திரம் எஞ்சி நிற்பதை ஸ்வானுபவத்தால் அறியாதவர் ஈசனைச் சகுண மூர்த்தியாகவே உபாசிப்பர் என்றும் அன்னார்க்கு பக்தியும் உபாசனையுமே ஞானமுதலாவதற்கு ஏற்ற மார்க்கம் என்றும் விவரித்து இருக்கிறார். இதற்கு மஹாஸந்நிதானம் கொடுத்த உதாரணமும் சிறந்தது. அதாவது உண்மையான அன்பு நெருப்பு போன்றது. நாமரூப பேதங்களுடன் உபாசிப்

பவரின் பக்தி என்ற அக்கினியால் வெண்ணெய் மெழுகு முதலிய காடின்யமுள்ள பொருள்களால் செய்யப்பட்ட பிம்பங்கள் போன்ற நாமரூபங்கள் நெய் போல உருகி, அந்நாமரூபங்களை யிழந்து அன்பாய் உருகி, அன்பே சிவமெனவாகும் என்கிறார். கனவு, நனவு, சுழுத்தி என்ற மூன்று அவஸ்தைகளிலும் அனுபவிக்கப் படும் ஆனந்தமும் போலி சுகமே. ஆனல் நான்காவது அவஸ்தையாகிய துரீயம் ஒன்றே ஜீவன் முக்தர்களாக்கி முக்காலத்திலும் பாதிக்கப்படாத நிலையை அடையச் செய்வது என்றும் தன் சுவானுபவத்தின் பிரமாணத்தால் நிலைநிறுத்தியிருக்கின்றார் மஹாஸந்நிதானம்.

## சில திருவிளையாடல்கள்.

மஹாஸந்நிதானம் தன் புண்ய பாதங்களால் எல்லா இடங்களையும் புனிதமாக்கியதுமல்லாமல் பற்பல அற்புதச் செயல்களும் செய்தனராம்.

மஹாஸந்நிதானம் திருநெல்வேலியில் வசிக்கும் பொழுது கைலாசபுரம் வக்கீல்

ஏ. கிருஷ்ணசுவாமி அய்யரவாள் அவர்களும் அவர்கள் குமாஸ்தா தருவை டி.ஏ. ராமசுப்பய்யர் அவர்களும் மற்றும் அவர்களது சில சிநேகிதர்களும் ஸ்வாமிகளைத் தரிசித்து மீண்டும் "நீங்கள் நடத்திவரும் செய்கைகள் யாவும் நம்பத்தக்கதல்ல, நம்பும்படி செய்ய ஏதாவது அத்தாக்ஷி காண்பிக்க வேண்டும்" எனப் பிரார்த்திக்கவே அப்பொழுது மஹாஸந்நிதானம் புன்னகையுடன் நீங்கள் இப்பொழுதே உங்களுக்கு தெரிந்தவர்கள் யாராவது காசியில் வாசஞ் செய்து கொண்டிருந்தால் அவர்களுக்கு "நான் நாளை பகலில் மாத்தியான்னிக காலத்தில் மணிகர்ணிகா கட்டத்தில் ஸ்நானம் செய்து கொண்டிருப்பதை கவனிக்கவும்" என்று ஓர் தந்தி கொடுத்து கேட்கும்படி சொன்னார். அதைச் செவியுற்ற அவர்களும் அவ்வாறே ஓர் தந்திகொடுத்து கேட்க, பதில் தந்தியும் "மஹாஸந்நிதானம் இவ்விடத்தில் மணிகர்ணிகா கட்டத்தில் ஸ்நானத்திற்கு வந்திருக்கிறதாக" வரைந்திருப்பதைக் கண்டதும் அச்சமயத்தில் மஹா

ஸந்நிதானம் இவர்கள் கூடவே திருநெல் வேலியிலேயே இருப்பதைக்கண்டு மிக்க ஆச்சரியமுற்று இவர் சிவனே எனக் கரு திப்பணிந்து மிகவும் தாழ்மையுடன் தங் களை பரீக்ஷித்ததற்கு "எங்களை மன்னித்து அனுக்கிரஹஞ்செய்து ஆட்கொள்ள வேண்டும்" எனப் பிரார்த்தித்தார்கள்.

மஹாஸந்நிதானமும் அவர்களுக்கு அனுக்கிரஹஞ் செய்தாராம்.

திருவையாற்றுக் கும்பாபிஷேகம் நடை பெறும் பொழுது (சந்தர்ப்பணைக்காக) திட்டம் செய்திருந்த விடங்களிலிருந்து போஜன சமயத்தில் நெய் வந்து சேராததை உணர்ந்த சீடர்கள் மஹாஸந்நி தானத்தினிடத்தில் வந்து தெரிவிக்க, ஸ்வாமிகளும் " அப்படியா; இன்னும் வர வில்லையா;" எனக் கேட்டு சீடர் களால் இவ்வாலயத்திலுள்ள தடாகத்தி லிருந்து நான்கு குடங்கள் நிறைய தீர்த்தம் கொணரச் செய்து அதில் பஸ் மோத்தாரணம் செய்து திருவையாற்றப் பனை உள்ளம் குளிரத் துதித்தார். துதிக்கவே அக்குடங்களிலிருந்த தீர்த்த

முழுமையும் நெய்யாக மாறியது. உடனே மஹாஸந்நிதானம் சீடர்களை நோக்கி இக்குடங்களிலுள்ள நெய்யை போஜனத்திற்கு உபயோகிக்கும்படி ஆக்ஞாபித்தார். சீடர்களும் அவ்வாறே உபயோகப் படுத்திக் கொண்டனர்.

பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் திட்டஞ் செய்திருந்த விடங்களிலிருந்து நெய்க்குடங்கள் வந்தன. அதனைக்கண்ட சீடர்க்ள் மஹாஸந்நிதானத்தினிடத்தில் தெரிவித்தார்கள். மஹாஸந்நிதானமும் அதை உணர்ந்தபின் சீடர்களைக்கொண்டு, "நீங்கள் முன்னமேயே இவ்வாலயத்தி லுள்ள தடாகத்திலிருந்து கொண்டு வந்த நான்குகுடங்கள் தீர்த்தத்திற்குப்பதிலாக வந்திருக்கும் நெய்க்குடங்களிலிருந்து நான்கு குடங்கள் நெய்யை தடாகத்தில் செலுத்திவிட்டு மிகுதியை உபயோகி யுங்கள்" என ஆக்ஞாபித்தார். இதைக் கண்ணுற்ற சீடர்களும் மற்றும் அங்கு வந்திருந்த மஹாஜனங்களும் மஹாஸந்நி தானத்தின் பாதகமலங்களில் சாஷ்டாங்க மாகப் பலமுறை நமஸ்கரித்து ஸ்வாமி களைப்புகழ்ந்து கொண்டாடினார்களாம்.

திருவையாற்று கும்பாபிஷேகம் நடைபெறும்பொழுது இரண்டாம் நாள் சிலவுக்குப் பணம் போதாததை உணர்ந்து ஸ்வாமிகள், தன் மேல் தரித்திருந்த சால்வையைக்கோவிலுக்குள் போகும் வழியில் விரித்துவிட்டு அங்கு மௌனமாய் வீற்றிருப்பதை அங்கு தரிசனத்திற்கு வந்த ஸ்திரீ புருஷர்கள் திருவையாற்றப்பனின் கருணையால் அப்போது தங்களிடமிருந்த திரவ்யத்தையும் ஸ்திரீகள் அணிந்திருந்த நகைகளையும் அந்த சால்வையில் சமர்ப்பித்தார்கள். மேலே கூறியுள்ள நகைகளும பணங்களும் சிலவுக்குப் போதுமானதாக விருந்தது என்று பலரால் சொல்லப்படுவதோடு கூட சென்னையிலுள்ள கூர்ஜர பிராமணர்களில் ஒருவரான மேத்தா அவர்களும் தம் பாட்டியாரால்சொல்லப்பட்டது என்று கூறினர்

மஹாஸந்நிதானம் கும்பாபிஷேகத்திற்குப் பணம் சேர்க்கும் பொழுது ஒரு சமயம் ஒரு முஸ்லீம் கனவானிடம் சென்று சம்பாஷித்தனர் என்றும் அக்கனவான் இவரது உள்ளத்தைப் பரிசோதிக்க விரும்பித் தனது வழக்கப்படி

இந்துக்கள் சேர்க்காத சில உணவுகளையும் சேர்த்துக் கொண்டு வைத்ததும், மஹாஸந்நிதானம் அவ்விடம் விட்டு அகலாமல், மனமுவந்து அவற்றைத் தமது திருக்கையால் தொட்டவுடன் அவைகள் தீங் கனிகளாக மாறியனவாம். அவனது அருள்பெற்ற அப்பெரியார்க்கு ஆகாதனவும் உண்டோ? மேலும் பக்தனைப் பரிசோதித்தல் தகாதுஎன்றே அப்படிச் செய்திருக்கலாம்.

மஹாஸந்நிதானம் தனக்கு எல்லா பாஷைகளும் தெரியவரும் என்பதைத் தான் வங்காளத்தில் யாத்திரை செய்த பொழுது வங்காளி பாஷையிலேயே உபன்னியாசித்தார் எனச் சொல்லுகின்றனர்.

ஒரு சமயம் ஹூக்ளி நதியில் மஹாஸந்நிதானம் தமது சீடருடனும் மற்றும் சில பிரயாணிகளுடனும் ஓடத்தில் செல்லும்பொழுது பெரும் புயற்காற்று தோன்றித் தோணியைக் கவிழ்க்க முயன்றதாம். அச்சமயத்தில் அங்குள்ளோர் பயப்படுவதைக் கண்ட மஹாஸந்நிதானம் உலகமாதாவை நினைத்துத்

தோணியில் இருந்தவர்களுக்குத் தைரியம் கூறினர். உலகமாதாவும் ஓர் பெண் வடிவுடன் ஓடத்தின் முன்னணியில் கரத்தில் துடுப்பேந்தி அவ்வோடத்தைக் செலுத்தி, அக்கரை சேர்த்து மறைந்தனளாம். இது ஸ்ரீ சுந்தரரின் திருவிளையாடல்களில் ஒன்று என அறிந்து அனைவரும் அவரது திவ்ய பாதங்களில் வீழ்ந்து துதித்தனர்.

மற்றும் ஓர் சமயம் மஹாஸந்நிதானம் புரிந்த அற்புதச் செயலும் சொல்லற்பாலது. காசியில் ஒரு முறை தமது சமாராதனைக்கு அன்னம் பரிமாறும் பொழுது போதாதிருப்பதை அறிந்து அன்னபூர்ணியம்மையை நினைத்துத் தமது திருகரத்தால் அன்ன பாத்திரத்தைத் தொட்ட மாத்திரத்தில் அப்பாத்திரம் அக்ஷயபாத்திரமாக விளங்கததாம். பாண்டவருக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் அக்ஷய பாத்திரம் கொடுத்தார் என்று புராணங்களில் கூறுவது பொய்யல்ல என்பதை நிரூபிக்கவே இங்ஙனம் செய்தனர் போலும்.

ஹாஸங்கிதானம் திருச்செந்தூர் கும்பாபிஷேகத்திற்கு போயிருந்த பொழுது ஸ்ரீ சுப்பிரமண்யக்கடவுளின் மெய்த் தொண்டர்களாகிய அவ்விடத்து பிராமணர்களுக்குள் ஒற்றுமையில்லா ததை தெரிந்து கொண்டு தமது திருவுளத் தால் எல்லாருடைய மனதையும் ஒன்று படச் செய்து ஷை அபிஷேகத்தை அதிக சிறப்பாக நடைபெறச் செய்தார்களாம். ஸ்ரீ சுந்தரரின் திருவிளையாடல்கள் முழு தும் கோத்த சரிதமாலை ஒன்றை ஸ்வாமி களின் பரம்பரை மாணாக்கராகிய திரு நெல்வேலி ஸ்ரீ சிவானந்த ஸ்வாமிகள் வரைந்திருப்பதாய்த் தெரியவருகிறது.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத்கீதையில் மொழிந்து அருளியபடி ஞானிகளுக்கு இவ்வுலகிலே எய்ய வேண்டிய வேலை சிறிதும் இல்லை. ஆயினும் மேலோர் எவ்வழியோ அவ்வழியே கீழோர் என்பது உண்மை ஆதலின் நல்ல காரியங்களைத் தாமே நடத்தி நல்வழி காட்டி உய்விக் கவே அவதரித்தனர் போலும்.

மேலே கூறிய திருவிளையாடல்கள் "லோகோபகாரி" என்னும் வாரபத்திரிகையில் ஸ்ரீ டி. கே. ராமபத்ரசாஸ்திரி அவர்களால் எழுதப்பட்டுள்ளது.

## ஒன்பதாவது அத்தியாயம்
## ஸ்ரீ சுந்தர மஹாஸந்நிதானத்தின் ஜீவிய மஹிமை

பிற சந்நியாசிகளைப் போலல்லாமல் சூத்திரர் என்று எண்ணப்படும் அனேகரைத் தமது சீடராக அங்கீகரித்து அவர்களுக்கு சைவ தத்துவங்களை உபதேசித்து பரமசிவனுக்கு அன்பொழுகும் அடியார்களாக்கிப் புன்மை தவிர்த்துப் போதம் தருவெதன சம்பந்தர் கூறிய திருநீற்றை ஞான சாதனமாக எப்பொழுதும் அணிந்து கொள்ளும்படியும் பரமசிவனைச் சேர்ந்த அடியாரென வெளிப்படையாகத் தெரிவிக்கும்படியான ஏகருத்ராட்சத்தைத் தரிக்கும்படியான அவர்களுக்கும் பஞ்சாட்சரத்தை உபதேசித்து, அவ்வைந்தெழுத்தையும் அவர்கள் நாத்தழும் பேறும்படி உச்சரிக்கச் செய்ததும்

ஸ்ரீ சுந்தரஸ்வாமிகளின் விசாலமான மனோபாவத்தை விளக்கும்.

**ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளை பலரும் அறியாததேன்.**

இவ்வண்ணம் அரிய செயல்களைப் புரிந்து சைவத்தை உயரச் செய்த ஸ்ரீ சுந்திர ஸ்வாமிகளை பலர் கேட்டு அறியாததும் கால விசேஷமே. இதே காலத்தில் கல்கத்தாவில் ஜீவன் முக்தராய் விளங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் ஸ்ரீ சுந்திர ஸ்வாமிகளும் அனேக விதங்களில் ஒப்புவமை உள்ளவர்கள். இருவரும் வாலிபப் பருவத்திலேயே பரம ஜோதியை நிர்விகற்ப சமாதியிற் கலந்து களித்தவர் இருவரும் ஐம்பதாவதாண்டிற்குள்ளேயே அகண்ட ஜோதியில் ஐக்கிய மடைந்தவர்கள். இருவரும் மனையாளுள்பட ஸ்திரீகளையும் துவிஜரல்லாதவரையும் சீடராக ஏற்றுக் கொண்டவர்கள்.

ஆனால் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் சாஸ்திரப் பயிற்சியால் வேதவேதாந்தங்களையும் தர்சனங்களையும், கற்றுணர்ந்தவர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரோ

சாஸ்திர அப்பியாசமின்றி முற்பிறப்பின் தவப்பயனாலும் ஜீவன் முக்தரான பெரியோர்களின் அனுக்கிரஹத்தாலும் ஹஸ்த மஸ்தக சம்யோகத்தாலும் சின் முத்திரா கரணத்தாலும நிர் விகற்ப நிலையடைந்தவர். ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தியாவின் தலைநகரில் வசித்து வந்ததால் ஐரோப்பா தேசங்களுக்குச் சென்று பிரசித்தி பெற்ற கேஷப் சந்தரசேன் முதலிய கல்வித்திறமை வாய்ந்தவர்கள் நேரில் அவரைப் பார்த்து, சல்லாபித்து, அவரது மகிமையைக் கண்டு, அவர் புகழைப் பரப்பியதாலும், அவரிடம் ஆத்மஞானம் பெற்ற தீரசிரோமணி ஸ்ரீ விவேகனந்தர் என்ற சீடர் அமெரிக்கா, ஐரோப்பா போன்றகண்டங்களுக்குச்சென்று சாதுரியத்துடன் பிரசங்கித்துத் தமது ஆசாரியாரின் மகிமையைப் பரவும்படி செய்ததாலும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் பெயர் பல தேயங்களிலும் பரவி, அவர் பெயரால் அனேக சங்கங்களும் மடங்களும் ஏற்படும் படியாயிற்று. அத்தகைய புகழ் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் பெற

வில்லை யெனினும் இருவம் தத்தமக்கு ஏற்பட்ட அடியார் கூட்டத்திற்கு அவரவர் பரிபாவத்திற்குத் தக்கபடி விவேகத்தையும், பக்தியையும் ஞானத்தையும் புகட்டினர். ஸ்ரீ சுந்திரஸ்வாமிளாகிய மஹாஸந்நிதானத்தின் மகத்துவம் அருத்திவாதமின்றியே விளங்கும். ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் பலரறியப் பரம் ஜோதியில் கலந்தும் நான்முகனும் மாதவனும் தேடியும் காணாது சோதி சுரூபமாய் விளங்கும் சிவமே போல் மாயமாய் மறைந்திருந்து, மண்ணில் உள்ளோர்க்குப் பரமானந்தம் அளித்துக்கொண்டு இன்றும் பிரகாசித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் திவ்விய சரித்திரம்

முற்றிற்று.

## நூற் சிறப்பு.

ஸ்ரீ சுந்தர மஹாஸந்நிதானம் அருளிச் செய்த நூல்களும் சிறந்தனவே. அவரி யற்றிய நூல்களுள் மிகச் சிறப்புற்றவை, சுவாநுபூதிரஸாயனம், சுவாநுபவரஸமஞ் சரி, நிஜானந்த விலாஸம் என்ற மூன்றே. தமிழில் இவை எழுதப்பட்டாலும் வட மொழிப் பரிபாஷை அதிகம் சேர்க்கப் பட்டிருப்பதால் அவைகளைச் சீடர்களுக் குப் பாடம் சொல்லி விளக்குவதும் உண்டு. இந்நூல்களில் எல்லா சாஸ்திரங் களின் தத்துவங்களையும் சித்தாந்தங் களையும் விளக்கி இருக்கின்றார்.

சுவாநுபூதி ரஸாயனத்தில் ஜகத்தின் உற்பத்தி, குருசிஷ்யக்கிரமம், ஞானம் பெறுதற்குரிய சாதனங்கள், சுவாநு பவத்தில் வரும் சச்சிதானந்தத்தின் நிரு பணம், துவைத மதம், விசிஷ்டாத்து வைதம், வேதாந்தத்திற்கும் சைவசித் தாந்தத்திற்கும் விரோத சமாதானம், இவை முக்கியமாய் விளக்கப்பட்டிருக் கின்றன.

சுவாநுபவரஸமஞ்சரியில் பஞ்ச கோ சங்களின் இலக்கணம் முதலிய விவகார

வேதாந்தத்தையும், அகண்ட விருத்தி சோதனையையும் விளக்கிச் சைவ நெறியைப்பற்றி விஸ்தாரமான நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. அத்துவைத மதத்தில் இரண்டு படிகள் உண்டு. சகுண மூர்த்தியின் இலட்சணமும், அதற்கும் ஜகத்திற்கும் ஜீவனுமுள்ள சம்பந்தங்களும், சகுணமூர்த்தியை உபாசிக்கும் முறையும் அதனாலான பயனும் கீழ்ப்படியைச் சார்ந்தவை. சகுணமூர்த்தி ஒன்றாயினும் அவரவர் மனோபாவத்தின்படி உபாசகர் அதனை வணங்குவர். ஸ்வாமிகள் வஸ்து பேத புத்தியில்லாவிடினும் சிவலிங்கத்திலும், விபூதி, ருத்திராக்ஷ, பஞ்சாக்ஷரத்திலும் விசேஷ அன்புடைத்தவராதலின் தனது சுவானுபவ ரஸமஞ்சரியில் சகுண உபாசன நிரூபணமாக, பரமசிவனது ஈசானம் முதலிய பஞ்சவக்த்ர இலக்கணமும், சிவலிங்க மகிமையும், விபூதி, ருத்திராக்ஷ பஞ்சாக்ஷர மகிமையும், பரமசிவப் பிரசாத மகிமையும் விளக்கியிருக்கிகப்பட்டிருக்கின்றன.

நிஜானந்த விலாஸத்தில் மஹாவாக்கியச் சுருக்கம் வேதாகம், சம்பிரதாயம், பிரகரணம், மனோநாசமார்க்கம் முதலிய நூல்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

உ

# ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் ஜாதகம்

கொல்லம் 1007-ம் ஆண்டு கர வருஷம் கார்த்திகை மாதம் 20-ம் தேதி (3-12-1831) சனிக்கிழமை, அமாவாசையும் அனுஷ நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் உதையாதி நாழிகை 26 விநாடி 15-ககு விருஷபலக்னத்தில் சுப ஜனனம் நவாம் சகலக்னம் கும்பம் ஜன்ம நக்ஷத்திரம் அனுஷம் ஜனன காலத்தில் சனிமஹாதசையில் இருப்பு 9வரு 6மீ 12 நாள்

ஸ்ரீவத்ஸ கோத்ரம்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | இராசி | | ராசி |
| குரு கேது | | | சனி |
| 4 | குரு சந் செ | சு | |

| | | | |
|---|---|---|---|
| | | | செ 4 |
| ல ராகு | நவாம்சகம் | | |
| | | | குரு கேது |
| கு | சு | சனி | சந் |

சுபமஸ்து.

சிவமயம்

ஸ்ரீ ஆனந்த நடராஜர் துணை.

திருநெல்வேலி கோடகநல்லூர்

**ஸ்ரீ சுந்தர சுவாமிகள் அதிஷ்டான**
**கும்பாபிஷேக சபையத்தில்,**

**அவர் மாணாக்கரிலொருவரும் வையை**
**மஹா வைத்தியநாதய்யர் அவர்கள்**

**ஜ்யேஷ்டருமாகிய இராமசுவாமி ஐயரவர்கள்**
**இயற்றிய தோத்திரப்பாவினை.**

---

## கலிப்பா

பொன்னாடு செயுந்தவத்தாற்
  பொற்புறுகை லையிலமர்ந்தாய்
தென்னாடு செயுந்தவத்தாற்
  சிறப்புறவீண் டவதரித்து
முன்னாடுஞ் செயலனைத்து
  முடித்தரிம ளந்தவிலைத்
தொன்னாடுக் தொழுவமர்ந்தாய்
  சுந்தரமீத சிகமணியே (௧)

ஐயாறு முதற்பலவா
மாலையங்கட் குரியபணி
செய்யாளு மதிசயிப்பச்
செய்துதிரு விழாவணியு
முய்யாறு முய்ந்திடநீ
யுஞற்றினையீ துரைப்பரிதால்
துய்யாதென் னரிமளர்வாழ்
சுந்தரதே சிகமணியே (௨)

அமுதமய வாரிதிபே
ரணைகடந்தா லெனத்திருவாய்க்
குமுதமலர்ந் தொருநாளுங்
குறையாத வன்மனத்தார்
தமதுடலுங் குழையும்வகை
தத்துவமெய்ப் பொருளுரைக்கு
மெமதுபுகழ்ச் சுந்தரதே
சிகமணிநிற் கிணையெவரே (௩)

அந்தகாண் முதலுன்சீ
. ரடிபிரியா தினிதிருந்தும்
வந்துவா ரிசத்துடன்வாழ்
மண்டுகம் போலிருந்தே
னெந்தநா ளின்னருளுக்
கிலக்காவேன் விலக்காமற்
றெந்தவே தனைத்தவிர்த்தாள்
சுந்தரதே சிகமணியே (௪)

எல்லாமுந் தானாகி
யாவையுந்தன் னிடைக்காணும்
வல்லார்கள் பலரிருக்க
வலிந்தென்னை யாட்கொண்டாய்
கல்லாத கடையனெனைக்
காத்தலே கருணையெனுஞ்
சொல்லாள நினைந்தனையோ
சுந்தரதே சிகமணியே (௫)

யானெனதென் றெழுமாயை
யெனும்பேயா லலைப்புண்டு
தானெனுமோர் சொற்பொருளின்
றகையுணராத் தமியேனை
மானதனுன் மான்பிடித்தான்
மானவலிந் தாட்கொண்டு
சோனையருண் மழைபெய்யுஞ்
சுந்தரதே சிகமணியே (௬)

பிறப்பதுவு மிறப்பதுவும்
பெருப்பதுவு மிளைப்பதுவு
மறப்பதுவு நினைப்பதுவும்
வாழ்வதுந்தாழ் வதுமின்றிப்
பெறப்படுமோர் பேறில்லாப்
பெறும்பேறு பெறவருள்வாய்
துறப்பவர்த மகத்தணியே
சுந்தரதே சிகமணியே (௭)

தேகந்தான் மனமுதற்றான்
ஜெகந்தானென் றுகந்திடச்செய்
மோகந்தான் பவக்கடலின்
மூழ்குவிக்க மாழ்குமெனக்
கேகந்தான் பிரமமல
தில்லைபிறி தெனக்களிக்குஞ்
சோகம்பா வனையருள்வாய்
சுந்தரதே சிகமணியே (அ)

மாடென்றுங் கன்றென்று
மகவென்று மனையென்று
நாடென்று நகரென்று
நானென்று நீயென்று
மோடென்றும் பொன்னென்று
முழிதரே லெமதுபதஞ்
சூடென்று சூட்டுவித்தாய்
சுந்தரதே சிகமணியே (௯)

மெய்ம்மாறு படுமாறு
வெவ்வேறாய்ப் பாவித்துப்
பொய்ம்மாயப் பெருங்கடலுட்
புகாவண்ணம் புரிந்தாய்க்குக்
கைம்மாறு காணேனிக்
காயமுதன் மூன்றளித்தேன்
சும்மாநிற் பவர்க்கெளிய
சுந்தரதே சிகமணியே (௰)

ஊனந்தா னணுகாம
லுள்ளபடி யுணர்ந்துவக்கும்
ஞானந்தந் தெப்பொருளு
நானல்ல திலையெனப்பே
ரானந்த வாரிதியி
லாழுமொரு வாழ்வருள்வாய்
ஆனந்தன் சேய்க்கரிய
சுந்தரதேசிகமணியே (௰௧)

## கலிவிருத்தம்

பொன்பொழி யரிமளமாம்
பொன்புரி நிகர்புரியில்
முன்பொழி யருண்மிகுநின்
முண்டக மலரடியி
லன்பொழி கொடியனுநி
னர்பர்க ளொடுவரலாற்
றுன்பொழி தரவருள்வாய்
சுந்தர குருமணியே (௧)

எந்தைநின் வடிவுறவே
யெங்கணு மிசைபெறவே
இந்திர நகர்வளமே
யிங்குறு மரிமளமே
சந்தனி னடியிணையே
சந்தத மொருதுணையே
சுந்தர குருமணியே
சுந்தர குருமணியே (௨)

மந்திர நிலைகுறியேன்
வண்புகழ் மறையறியேன்
றந்திர நிலைபுரியேன்
றண்டமிணிலை தெரியேன்
யந்திர நிலைதெளியே
னென்செய்வ னினியெளியேன்
சுந்தர குருமணியே
சுந்தர குருமணியே (௩.)

புன்செயல் பலபுரிவேன்
புந்திசெல் வழிதிரிவே
னுன்செய லெனநினையே
னுய்ந்தெழு நிலைபுனையே
னென்செய விவையொழியே
னிங்குன திசைமொழியேன்
றுஞ்சலி னெறிபணியே
சுந்தர குருமணியே (௪)

எங்கணு முயர்சிவமே
யென்றெணு மநுபவமே
யிங்கணு வளவுமிலே
னின்புறு வழியினிலேன்
மங்கள கரயெனையே
வஞ்சக னெனநினையேல்
துங்கவ மலவணியே
சுந்தர குருமணியே (௫)

அண்டர்கள் புகழ்வடிவே
  யந்தமின் மறைமுடிவே
மண்டருள் பொழிபுயலே
  வந்தன னுனதயலே
கண்டுள முருகிடவே
  கண்புனல் பெருகிடவே
தொண்டுசெய் முறைப்பணியே
  சுந்தர குருமணியே (௯)

### கட்டளைக்கலித்துறை

பொன்னார்கயிலை
  மலைமேலமர்ந்து புவிபுகழப்
பின்னாவலூரி லுதித்தரன்
  றோழரென் பேருமடைந்
தந்நாளிற் கோடக நல்லூரிற்
  றோன்றி யரிமளமாந்
தெனாட்டினிலமர்ந்தாயருள்
  சுந்தரதேசிகனே (௧)

ஐந்நதியே முதலாம்பல
  கோயிலணி பணிக்குப்
பொன்னிதி நல்குபு
  கும்பாபிஷேகம் புரிவித்த நின்
சந்நிதி வந்தன னாண்டருள்
  தாம்பிர பன்னி பொன்னித்

தென்னதி னோருள் வள்ளா
லென் சுந்தரதேசிகனே (உ)

சுந்தாமணிவிளக்கே
மறையாலுநுவலரிய
நந்தாமணி மன்றெனு
வென்னுளத்திலு நண்ணுவை
[யோ

தந்தாமணி முடிக் கென்றடி
யார்க்குச் சரணுதவுஞ்
சிந்தாமணியனையாய நட்
சுந்தரதேசிகனே (௩)

செத்துப்பிறந்து திரிவாரை
நம்பித் திரிந்து திரிந்
தெய்த்துக்கிடக்கு மெளியேனை
யாளவு மெண்ணுவையோ
முத்திக்கண் வாஞ்சை
மிகுமடியார்தம் முளரிமலர்ச்
சித்தத்திலூறு மமுதேயென்
சுந்தரதேசிகனே (௪)

மருவாய் மருமலராய்
மணியாயம்மண் ணொளியாய்
உருவாயருவுருவாயருவாய்
மெய்யுணர்வுதவுங்

குருவாய் நல்லின்ப
  மகோததியாயென் குலதெய்வ
[மாய்க்
திருவாயருள வருவாயென்
  சுந்தர தேசிகனே (ரு)

கல்வித்திருவையுஞ் செல்வத்
  திருவையுங் காதலர்க்குச்
சொல்வித்தடைவித் தருளவல்லா
  யென்றுயர் களைவாய்
நல்வித்தியா நிதியாகிய
  மேலவர் நாடுமுக்திச்
செல்விக்கினிய தலைவாவென்
  சுந்தர தேசிகனே (சு)

ஐயாதிருப்பணி நின்னடிக்
  கென்கை செய்யாது கண்ணீர்
பெய்யா திருப்பகழுங்
  குழையாதூறும் பேய்மதியை
மெய்யாதிருப்பவுன்னுன்
  முடியாதுகொல் மிக்கருணீ
செய்யாதிருப்பதழகோ வென்
  சுந்தரதேசிகனே (எ)

.பள்ளமடையினில் வெள்ள
  முற்றுங்குன்பதத்திலன்பா

முள்ளமடையச்செயா
வெளையாளவு முன்னுவையோ
வெள்ளமடை கடந்தாங்கடி
யார்க்கருள் வெள்ளநல்குந்
தெள்ளமுதே கற்பகமே
யென் சுந்தரதேசிகனே (௮)

வான்மாரிநோக்கும்
பயிரெனத்தாய் தன்மதுரமுலைப்
பான்மாரி நோக்கு மகவென
வுள்ளம் பதைத்து விழி
தான் மாரி பெய்யவுடல் புளகிப்ப
நின்றண்ணருளாந்
தேன்மாரி நோக்குமெனக்
கருள் சுந்தரதேசிகனே (௯)

சங்கமலங்களை வாவியரிமளந்
தன்னில் வந்தென்
றுங்கமலங்களை யென்றிறைஞ்
சாமையிற்றன்னுபவ
பங்கமலங்களைத் தீர்த்தரு
ளென்றுன் பதமலராஞ்
செங்கமலங்களை வாழ்த்தினன்
சுந்தரதேசிகனே (௰)

வானாய் வளியாயொளியாய்ப்
புனலாய் வசுந்தரையாய்

ஊனாயுயிராயுயிர்த்துணையாகி
யொன்றாயனைத்தும்
தாயாயருள் பொழிவானாய்
மெய்யன்பர் தமதுளத்திற்
றேனாயினிப்பவனானையென்
சுந்தர தேசிகனே. (௱க)

(கலிப்பா முற்றிற்று.)

---

## சுவாமிகள் மாணாக்கரிலொருவரான திருநெல்வேலி மாவடி சிதம்பரம் பிள்ளை இயற்றிய அஷ்டபந்தன கவிதை

### நேரிசை வெண்பா

உருவாவா னோர்கா லுணர்வா லுணரா
வருவாவா னம்புவிகட் கொல்லாங்—குரு
வாவான்
மூடகமில்லாதுகெட்ட மோனமளித்
தாடிமகிழ்
கோடகநல் லூர்பிறந்த கோன்.

### எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

பொன்பூத்த பொழில்சூழுங் கோடகநல்
லூரின்முன்

பூசுராகு லந்த ழைப்பப்
புனைமதிச் சடையன்மிட றடைகறையைய
விடவெளிப்
பூங்குழலி யாயு தித்தே
மின்பூத்தி லங்கவத ஞற்சுந்த ரப்பெயர்
விளங்கமறை முடிவ னைத்து
மெய்யுடன்வ ளர்ந்துவர வானந்த
மேவீட்டில்
வீண்போக்கு மென்போ லியர்க்
கன்பூற்றி யின்பாக்கி யகிலங்க
டன்லைடிக்
கடிமையாயேவல் புரிகா
ளரிமளந் தன்னில்வந் தானந்த மயமாகி
யரியபிர மத்த டங்கத்
துன்பூத்தை யில்லாத விவனுளா
ரவனடியர்
தொலைவில்பொரு ளால மைத்த
சொன்னமய மாகவொளி ராலயங்
குடிகொண்ட
துய்யசற் குருநாதனே. (க)

துய்யதா மாயிரத் தெழுபதா மாண்டினைத்
தொடருசய வருடமதனிற்
சொன் மகர மாதமுந் தேதியிரு பத்தாறு
சூழ்ந்த குரு வாரமிடையே

செய்யபுனர் பூசகாண் மிதுனலக்
கனமுமாய்ச்
சேர்ந்த சுபநாளின் முனிவோர்
செப்புமறை யோர்வேத மோதமற்ற
றவணடியர்
செந்தீ வளர்ப்ப வெங்குந்
தையலர்க ளாடவர்கள் சகலதே
யத்திலுள
சற்சனர்க ணற்சீடர்கள்
சயசயவெ னக்கீத நாதாந்த யங்கவெந்
தணரசன மேன டக்கப்
பையவெண் பந்தனங் கொண்டதரி
சனமுதற்
பாலித்த பரம குருவே
பாருளோர் வாழ்கவரி மனம் வாழ்க
வதிலுறும்
பைங்கூழ்கண் முதல் வாழ்கவே.

(௨)

# பிழை திருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 20 | அபகரிப்பதை விட | உபகரிப்பதை விட |
| 6 | 19 | பல் | பல |
| 8 | 6 | கங்கை | கண் கை |
| 46 | 7 | ரஸாபானம் | ரஸாயனம் |
| 47 | 2 | நூலே | நூலே |
| 64 | 12 | ஸிஜயம் | விஜயம் |
| " | கடைசி வரியில் | பலிகள் | பணிகள் |
| 82 | 8 | வெறுண்டு | வெருண்டு |
| 87 | 21 | கருணைக்குறிய | கருணைக்குரிய |
| 90 | 16 | திருவிளையாடல் கள் | திருவிளை யாடல்கள் |
| 104 | 9 | ஸ்ரீவத்ய கோத்ரம் | ஸ்ரீவத்ஸ கோத்ரம் |

,, இராசி சக்கிரத்தில் செவ்வாய், புதனுடன் தனுர் ராசியில்

☞ இச்சரித்திரத்தைப் படிப்பவர்கள் தயவு செய்து மேல்கண்ட பிழைதிருத்தங்களை திருத்தி கொண்டபின் படிக்கவும்.